




VIRAKESARI

# வீரகேசரி

THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA

Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk

பிராந்திய,நகரப்பதிப்பு








மலர் : 92 இதழ்: 110 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (14.12.2021) ஹிஜ்ரி 1443 ஜ.அவ்வல் 09 விலை :ரூ.30 பக்கங்கள் : 20




இலங்கைக்கு 5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவி செயலாளரும்,அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆசிய –பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளருமான கன்னி விக்னராஜாவிற்கும் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று நிதியமைச்சில் இடம்பெற்றபோது...

# பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதியால் ஒத்திவைப்பு

## விசேட குழுக்கள் தவிர்ந்து ஏனைய பாராளுமன்ற குழுக்கள் கலையும்

**நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க எடுக்கப்பட்ட தீர்மானமாக இருக்குமென கோப், கோபா உள்ளிட்ட பிரதான குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவிப்பு**



(ஆர்.யசி)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாம் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் பாராளுமன்றத்தின் விசேட குழுக்கள்தவிர்ந்து ஏனையசகலகுழுக்களும் கலைவதுடன் சபாநாயகர் தவிர்ந்து பாராளுமன்றத்தின் சகல பதவி நிலைகளும் நீங்குகின்றன.

ஜனாதிபதியின் தீர்மானம் தெளிவில்லாத ஒன்றெனவும் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க ஜனாதிபதியினால் 10

# சிங்கப்பூருக்கு ஜனாதிபதி தனிப்பட்ட விஜயம்

(எம்.மனோசித்ரா)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ளார். ஐவர் அடங்கிய குழுவினருடன் ஜனாதிபதி சிங்கப்பூர் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் 10

# ஜனாதிபதியின் தீர்மானத்தில் மறைமுக காரணம் இருக்கலாம்

## கோபா குழு செயலிழக்கும் என்கிறார் அதன் தலைவர் திஸ்ஸ விதாரண

(எம்.ஆர்.எம்.வசீம்)

ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத்தொடரை நிறைவு செய்தமைக்கு பின்னால் ஏதாவது மறைமுக காரணம் இருக்க வேண்டும். என்ன காரணம் என்பது தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு(கோபா)வின் தலைவருமான 10

**பிரதான இரண்டு எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு எதிராக**

# வழக்கு தொடர நுகர்வோர் அதிகார சபை தீர்மானம்

**கடந்த பத்து நாட்களில் 150 வெடிப்பு சம்பவங்கள் பதிவு; இரண்டு மரணங்கள்**

(ஆர்.யசி)

சமையல் எரிவாயு கசிவு காரணமாக இடம்பெறும் வெடிப்பு சம்பவங்களை அடுத்து இலங்கையின் பிரதான இரண்டு எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு எதிராக ஒரு சில தினங்களில் வழக்கு தொடர நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளதுடன், 10

# மு.கா.வின் பதவிகளிலிருந்து தௌபீக் எம்.பி. இடைநிறுத்தம்

## செயலாளர் நிசாம் காரியப்பர் அறிவிப்பு



(எம்.ஆர்.எம்.வசீம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான எஸ்.எம். தௌபீக் கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தீர்மானத்துக்கு முரணாக வரவு செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு வாக்கெடுப்பில் அதற்கு 10

**தனது மிகமோசமான செயற்பாடுகளுக்கான**

# இராஜதந்திர திரையாகவே சீனாவைக் கருதும் இலங்கை

**வலுவான அழுத்தத்தை அமெரிக்கா பிரயோகிக்கவேண்டும்; காங்கிரஸிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்**

(நா.தனுஜா)

இலங்கை அரசாங்கம் அதன் மிகமோசமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மறைப்பதற்கான இராஜதந்திர ரீதியான திரையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சீனாவின் பக்கம் திரும்பியிருக்கின்றது. இருப்பினும் பொருளாதார ரீதியில் அதன் மிகமுக்கிய 8

# எரிவாயு சிலிண்டர் வெடித்து 51 வயதுடைய பெண் உயிரிழப்பு

**நட்டஈடு கோரி வழக்கு தொடரும் பெண்ணின் கணவர்**

(எம்.மனோசித்ரா)

கண்டி குண்டசாலை பிரதேசத்தில் சமையல் எரிவாயு சிலிண்டரை அண்மித்த வெடிப்பு சம்பவத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். 10

# சீனாவின் தூதுவர் வடக்கு விஜயம்

(ஆர்.ராம்)

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் தூதுவர் கீ சென்ஹொங் இருநாள் விஜயம் மேற்கொண்டு வடமாகாணத்துக்கு செல்லவுள்ளார்.

இந்த விஜயம் எதிர்வரும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக சீன தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த விஜயத்தின்போது, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 10

# வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பூஸ்டர் தடுப்பூசிகள் அவசியம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(ஆர்.யசி)

கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கண்டிப்பாக மூன்றாம் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை சகலரும் பெற்றுக்கொள்ள வேண்டும். பூஸ்டர் தடுப்பூசியே உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என 10

**புகையிரத நிலைய அதிபர்கள்**

# போராட்டம்


(இராஜதுரை ஹஷான்)

புகையிரத சமிக்ஞை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறுக்கான தீர்வு, புகையிரத நிலைய அதிபர் சங்கத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினர் 10






# பிரபஞ்ச அழகுராணியாக முடிசூடிய இந்திய நடிகை ஹர்னாஸ் சந்து



70 ஆவது பிரபஞ்ச அழகுராணிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு இஸ்ரேலிய செங்கடல் பிராந்திய வாசஸ்தல நகரான ஏலாத்தில் இடம்பெற்றது. இதன்போது இந்தியாவைச் சேர்ந்த ஹர்னாஸ் சந்து சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த 10

**கொவிட் தொற்றால் இதுவரையில்**

# 60 கர்ப்பிணிகள் 89 சிறுவர்கள் பலி

(எம்.மனோசித்ரா)

கொவிட் தொற்றின் காரணமாக இதுவரையில் 60 கர்ப்பிணித்தாய்மாரும் 89 சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர். எனவே கொவிட் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இந்த இரு தரப்பினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று 10











# வத்தளையில் கடலில் மூழ்கி இரு மாணவர்கள் உயிரிழப்பு

## நண்பர்களுடன் நீராட சென்றபோது அனர்த்தம்

(எம்.எப்.எம்.பஸீர்)

வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ப்ரீத்திபுர கடலில் நீராடச்சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போன நிலையில் நேற்றுக் காலை கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 10

### ஈஸ்டர் தின தாக்குதலுக்கு நீதியில்லை

# வெறுமனே நாடகம் அரங்கேற்றப்படுகிறது

## கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

(எம்.மனோசித்ரா)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு முறையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் செயற்படுத்தப்படவில்லை. மாறாக நாடகமொன்று மாத்திரமே அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கனேமுல்ல தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையின்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்று வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளுக்குநாள் வாழமுடியாத சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவதாக சிலர் கூறியிருக்கின்றனர். எனினும் அதனை செய்யக் கூடியவர் யார் இருக்கிறார் என்பது எமக்கு தெரியாது.

மதத் தலைவர்கள் என்ற ரீதியில் கிழ் மட்டத்தில் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளில் பங்கேற்றால் நாம் செய்வது எமது மதத்தைக் காட்டிக் கொடுப்பதேயாகும். நீண்ட காலமாகப் பயின்ற மதக் கொள்கைகளை அரசியல்வாதிகளின் கைக்குட்டையாக்க முடியாது.

மதத் தலைமைத்துவம் எப்போதும் சுயாதீனமானதாகக் காணப்பட வேண்டும். தவறுகள் இடம்பெறும் போது அதனை சுட்டிக்காட்டக் கூடிய வகையில் மதத் தலைவர்கள் பலம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் அவர்கள் அந்த மதத்தை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை என்றே அர்த்தப்படும். தற்போது நாட்டில் பெரும்பாலான அரசியல் கட்சிகளின் மேடைகளில் மதத்தலைவர்கள் அமர்ந்திருப்பது பொருத்தமான செயல் அல்ல.

மதத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக முடியாது. அவர்கள் அரசியலிலிருந்து முழுமையாக வெளியேற வேண்டும். மதத்தலைவர்களது ஒரே கட்சி அவர்கள் கற்ற சமயம் மாத்திரமேயாகும். அந்த மத தர்மத்துக்காக முன்நிற்க வேண்டும். கிடைக்கக் கூடிய சிறு இலாபங்களுக்காகவும் சுக போகத்துக்காகவும் அரசியல் தலைவர்களிடம் மதத் தலைவர்கள் தலைவணங்கக் கூடாது.

சுற்றுலாத்துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள் அல்லது ஹோட்டல்களில் நத்தார் பண்டிகையன்று மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. இதுவா ஆசியாவின் ஆச்சரியம்? இதுவா சுபீட்சத்தின் நோக்கு? இது பாரிய குற்றமாகும். நத்தார் தினத்தையும் இழிவுபடுத்துகின்றனர். சுற்றுலாத்துறை அமைச்சர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

வெசாக் தினத்தன்று அதனை தடை செய்தால், நத்தார் தினத்தன்றும் அதை தடை செய்ய வேண்டும். மதம் என்பது குடிபோதைக்கு அடிமையாகி இறப்பதல்ல. கொள்கை ஒன்று காணப்படுமாயின் அந்த கொள்கையைப் பாதுகாக்க வேண்டும். ஒரு மதத்திலுள்ள கொள்கைகள் ஏனைய மதங்களுக்கும் பொதுவானதாகும். ஆனால் மதுபானம் குறித்த கோரிக்கையின் பின்னணி இலாப நோக்கு மாத்திரமேயாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முறையான செயற்பாடுகள் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை. இதன் பின்னணியில் இருந்தவர்கள் தற்போதும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் கூட அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. அவர்களது பெயர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒருவர் கூட விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. ஆனால் நாடகமொன்று மாத்திரமே அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆணைக்குழுவொன்று நியமித்து, அதற்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி, ஆயிரக்கணக்கானோர் சாட்சியமளித்துள்ளனர் என்றால், அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துங்கள்.

ஒருசிலர் மாத்திரம் கைது செய்யப்பட்டு, பலர் வெளியில் சுதந்திரமாகவுள்ளனர். இது தொடர்பில் கருத்து தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கிறது. எவ்வாறிருப்பினும் அரசியல் செயற்பாடுகளிலிருந்து முற்றாக விலகுமாறு மதத் தலைவர்களிடம் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். மதத்தின் புனிதம், சுயாதீனத்தன்மை என்பவற்றை பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். எந்த கட்சியாக இருந்தாலும் அரசியல்வாதிகளின் கைக்குட்டையாக வேண்டிய அவசியம் மதத்தலைவர்களுக்கு இல்லை என்றார்.

# கொட்டதெனியாவவில் இரு சிறுவர்களை காணவில்லை

### ஆரம்ப விசாரணைகளில் எந்த தகவலும் வெளிப்படாத நிலையில் பொது மக்களின் உதவியை நாடிய பொலிஸ்

(எம்.எப்.எம்.பஸீர்)

கம்பஹா கொட்டதெனியாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வத்தேமுல்ல, பந்துராகொட பகுதியைச் சேர்ந்த உறவினர்களான இரு சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர். கடந்த நவம்பர் 23 ஆம் திகதி முதல் அவர்கள் காணாமல் போயுள்ளதாக பொலிசாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ள நிலையில், ஆரம்பக்கட்ட விசாரணைகளுக்கு அமைய அச்சிறுவர்கள் தொடர்பில் எந்த தகவல்களும் இதுவரை இல்லை என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இவ்வாறான பின்னணியில் அந்த இரு சிறுவர்களையும் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 10 மற்றும் 12 வயதான இரு சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் காணாமல்போயுள்ள சிறுவர்களின் விபரங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் 10 வயதான திசாநாயக்க முதியன்சேலாகே சஞ்செலும் எனும் சிறுவன், 4 அடி உயரமானவர் எனவும் சற்று பருமனான உடற் தோற்றத்தை கொண்டவர் எனவும் தலைமுடியை கட்டையாக வெட்டியிருந்ததாகவும், மேல் வரிசை பற்களில் இரண்டு விழுந்துள்ளதாகவும் அடையாளமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக நீல நிற ரீசேர்ட், கறுப்பு நிற சதுரங்களைக் கொண்ட அரைக் காற்சட்டையை அவர் அணிந்திருந்ததாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மற்றைய சிறுவன் ஜயசேகர முதலிகே அகில தேதுனு எனும் 12 வயதானவர் என பொலிஸார் கூறுகின்றனர். உடல மைப்பில் சற்று பருமனான அவர், 4 அடி 10 அங்குலம் உயரமானவர் என பொலிசார் கூறினர். தலைமுடியை கட்டையாக வெட்டியுள்ள அவரின், மேற்பல் வரிசையில் பற்கள் சில முன்னோக்கி தள்ளுண்டுள்ளதாக பொலிசார் அடையாளமாக தெரிவித்துள்ளனர். அவர் இறுதியாக நீலநிற கொலருடன் கூடிய ரீ சேர்ட்டும் சிவப்பு நிற அரைக் காற்சட்டையும் அணிந்திருந்ததாக கூறுகின்றனர்.

குறித்த சிறுவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் கொட்டதெனியாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் – 0718591634, எனும் இலக்கத்துக்கோ கொட்டதெனியாவ பொலிஸ் நிலையத்தின் 0332240050, 0332272222 எனும் இலக்கங்களுக்கோ அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கு விரைவில் அழைப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(எம்.மனோசித்ரா)

தமிழ் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின் அழுத்தத்தை வலியுறுத்தி ஒருமித்த கோரிக்கையை முன்வைப்பதற்கு எதிர்த்தரப்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் முதற்கட்டமாக ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளன. இந்த ஒற்றுமையை மேலும் ஸ்திரப்படுத்திய பின்னர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் ஆளுந்தரப்பில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்தியாவின் தலையீடு அவசியம் என்பதை மையப்படுத்தி கடந்த நவம்பர் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகள் கூடி விசேட கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தன. அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தையிலுள்ள குளோபல் டவர் ஹோட்டலில் இரண்டாவது கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) மற்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். எவ்வாறிருப்பினும் இவை அனைத்தும் எதிர்த்தரப்பிலுள்ள கட்சிகளாகும். எனவே இந்த கலந்துரையாடலுக்கு 13ஐ ஆதரிக்கின்ற ஆளுந்தரப்பின் தமிழ்க் கட்சிகளுக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று வினவிய போதே செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

'ஆரம்பத்தில் எமது கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும். எமக்குள் பரஸ்பரம், ஒற்றுமை என்பன உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே 13ஐ ஆதரிக்கின்ற தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படும். அதற்கான யோசனை உள்ளது. எனினும் எமக்குள்ளான ஒற்றுமை மேலும் கட்டியெழுப்பப்பட்ட பின்னர் அதனை செய்ய முடியும்.

இவ்வாறு தமிழ்க் கட்சிகளை ஆதரித்து அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்போம். அதன் பின்னர் 13ஐ ஆதரிக்கக் கூடியதும் அதிகாரங்களை வழங்கக் கூடியதுமான சிங்கள கட்சிகளின் ஆதரவும் கோரப்படும். எனினும் அவற்றை எம்முடன் இணைத்துக் கொண்டு செயற்பட முடியாது என்றார்.

# நிதி நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியமே சிறந்தவழி

## சுதந்திர கட்சி கூறுகிறது

(எம்.மனோசித்ரா)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னரே யுகதனவி ஒப்பந்தம் தொடர்பில் நாமும் தெரிந்து கொண்டோம். எனவே யுகதனவி ஒப்பந்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பது மாத்திரமின்றி நாட்டுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் இதுவரையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லையல்லவா? மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் அதனை சமர்ப்பித்த பின்னரே நாமும் அதிலுள்ள விடயங்களை அறிந்து கொண்டோம்.

இந்த ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர். இது நாட்டின் பிரச்சினையாகும். மாறாக தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் அல்ல. நாட்டுக்கு வருவாயை விநியோகிக்கும் ஏகாதிபத்திய உரிமத்தை தனியொரு நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் இதுவாகும்.

இவ்வாறான ஒப்பந்தத்தை அமைச்சரவைக்குக்கூட தெளிவுபடுத்தாமலுள்ள நிலையில், அமைச்சரவை எவ்வாறு அதன் பொறுப்பை நிறைவேற்றும்? எனவே சர்ச்சைக்குரிய இந்த ஒப்பந்தத்தை அமைச்சரவைக்கு மாத்திரமின்றி, நாட்டுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. அரசாங்கம் என்ற ரீதியில் ஏதேனுமொன்றை மறைக்க வேண்டும் என்று எண்ணினால் மாத்திரமே அதனை மறைக்க வேண்டிய நிலைமையும் ஏற்படும்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிதி நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி தீர்வு காண்பது சிறந்த மாற்று வழியாகும். குறிப்பாக இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் எமக்கு உதவ முன்வ ராத நிலைமை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கும்போது அவர்கள் நிச்சயம் நிபந்தனைகளை முன்வைப்பர்.

இலங்கை மின்சாரசபை மற்றும் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் விமான சேவை உள்ளிட்டவை பாரிய நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளன. இவ்வாறான நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது அத்தியாவசியமானது என்பது என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடாகும். நாட்டு மக்கள் எதிர்காலத்தில் பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் காணப்படுகிறது. இந்த அபாயத்திலிருந்து மீள்வதற்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.




# கொழும்பில் 6 இடங்களில் மூன்றாம் கட்டத் தடுப்பூசி

## பிரதான மருத்துவ அதிகாரி ருவான் விஜேமுனி

(எம்.மனோசித்ரா)

கொழும்பில் 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் நாளாந்தம் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் கொழும்பில் 6 இடங்களில் முன்னெடுக்கப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி ருவான் விஜேமுனி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பில் தற்போது நாளாந்தம் 10முதல் 15 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்படுகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள மொத்த சனத்தொகையில் 95 சதவீதமானோருக்கு முதற்கட்ட தடுப்பூசியும் 78 சதவீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் 35000 பேருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கொழும்பில் 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் நாளாந்தம் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடகொழும்பு நியூசுசார் மகப்பேற்று வைத்திய சாலை, இல 2பீ பேஸ் வீதியில் அமைந்துள்ள பொது மண்டபம், பொரளை கம்பல் பூங்கா, கொழும்பு கிழக்கு டீ.எஸ்.இல 4 சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் வெள்ளவத்தை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகிய இடங்களில் தினந்தோறும் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்படும். அதேபோன்று தொற்று அறிகுறியுடையோருக்கு பொரளை கம்பல் பூங்காவில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை அன்டிஜன் பரிசோதனையும் முன்னெடுக்கப்படுகிறது. கிளினிக் நாட்களில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்படும். தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்பதற்காக கொவிட் பரிசோதனைகளை கைவிடவில்லை.

கொவிட் தொற்று மாத்திரமின்றி தற்போது டெங்கு பரவலும் அதிகரித்துள்ளது. எனவே இது குறித்து அவதானமாக செயற்படுமாறு மக்களை கேட்டுக் கொள்கிறோம். இவை தவிர பண்டிகை காலம் என்பதால் தரக்குறைவானதும், காலாவதியானதுமான உணவுகள் விற்பனை செய்யப்படக்கூடும். இது தொடர்பில் கொழும்பு மாநகரசபை விசேட சுற்றிவளைப்புக்களை முன்னெடுத்துள்ளது என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டியதில்லை

## அறிவித்து விட்டேன் என்கிறார் அஜித் நிவாட் கப்ரால்

(இராஜதுரை ஹஷான்)

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு உத்தியோகபூர்வ அழைப்பு கிடைக்கப் பெறவில்லை. டொலர் நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டிய தேவை கிடையாது என்பதை மத்திய வங்கி சார்பில் எடுத்துரைத்துள்ளோம் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் மத்திய வங்கியின் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் எந்நேரத்திலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் உரிமை ஜனாதிபதிக்கு உண்டு. அமைச்சரவை கூட்டத்துக்கு எம்மை விசேடமாக அழைக்க வேண்டிய அவசியம் கிடையாது.

அமைச்சரவை கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு உத்தியோகபூர்வமான அழைப்பு கிடைக்கப் பெறவில்லை. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எந்நேரமும் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதே நாட்டின் தற்போதைய டொலர் நெருக்கடிக்கு ஒரேதீர்வு என எதிர்த்தரப்பினர் வலியுறுத்துகின்றனர். கடந்த அரசாங்கம் நாணய நிதியத்தை நாடி எதிர்கொண்ட நெருக்கடியைப் போன்று தற்போதைய அரசாங்கமும் நெருக்கடிக்குள்ளாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அவர்கள் அவ்வாறான யோசனைகளை முன்வைக்கிறார்கள்.

டொலர் பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய வங்கி பல திட்டங்களை தற்போது செயற்படுத்தியுள்ளது. புலம்பெயர் இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவித்தல், சுற்றுலாத் துறை சேவை கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றுக்கு தேவையான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

டொலர் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது மாத்திரம் இறுதி தீர்வல்ல என்பதை இதற்கு முன்னரும் தெரிவித்துள்ளோம். நாணய நிதியத்தை நாடாமல் நெருக்கடி நிலைமையை சீர் செய்யும் யோசனைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

டொலர் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்படும். அதனால் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படும் என அரசியல் களத்தில் பேசப்படும் விடயங்கள் அடிப்படையற்றவை. உரிய நேரத்தில் சிறந்த தீர்மானங்களை முன்னெடுப்போம். நாட்டில் எக்காரணிகளுக்காகவும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றார்.

# சுபயோகம்

**14.12.2021 பிலவ வருடம் கார்த்திகை மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

சுக்கில பட்ச ஏகாதசி திதி பின்னிரவு 2.20 வரை. அதன்மேல் துவாதசி திதி. அஸ்வினி நட்சத்திரம் நாள் முழுவதும். சிரார்த்த திதி வளர்பிறை ஏகாதசி. சித்த யோகம். சமநோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் உத்திரம், அஸ்தம். சுபநேரங்கள் 10.30 –11.30, மாலை 4.30 –5.30, ராகுகாலம் 3.00 – 4.30, எமகண்டம் 9.00 –10.30, குளிகை காலம் 12.00 –1.30, வார சூலம் வடக்கு, பரிகாரம் பால்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | ராகு | |
| குரு | தினசரி கிரகநிலை<br>கார்த்திகை 28 செவ்வாய்<br>கால சர்ப்ப தோஷம் | | |
| சுக், சனி | | | |
| புத | சூரி, செவ் கேது | | |

| | |
|---|---|
| மேடம் | – இலாபம், ஆதாயம் |
| இடபம் | – பணியில் மேம்பாடு |
| மிதுனம் | – நிறைவு, மகிழ்ச்சி |
| கடகம் | – சோர்வு, அசதி |
| சிம்மம் | – நற்செய்தி, மகிழ்ச்சி |
| கன்னி | – அமைதி, நிம்மதி |
| துலாம் | – உழைப்பு, உயர்வு |
| விருச்சிகம் | – புகழ், பாராட்டு |
| தனுசு | – அதிர்ஷ்டம், செல்வாக்கு |
| மகரம் | – விவேகம், வெற்றி |
| கும்பம் | – ஜெயம், புகழ் |
| மீனம் | – சுபம், செல்வாக்கு |

இன்று கார்த்திகை மாத சுக்கிலபட்ச ஏகாதசி விரதம்.

புதன், ராகு கிரகங்களின் ஆதிக்க நாளிது.

அதிர்ஷ்ட எண்கள் – 1, 5, 9

பொருந்தா எண்கள் – 8, 6

அதிர்ஷ்ட வர்ணங்கள் – மஞ்சள், வெளிர்நீலம்

இராமரத்தினம் ஜோதி

(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

# படுகொலை செய்யப்பட்ட பிரியந்தவின் விடயத்தில் பாகிஸ்தானின் செயற்பாடு திருப்தியளிக்கின்றது

## அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



(இராஜதுரை ஹஷான்)

பாகிஸ்தான் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அரசாங்கம் நீண்டகால செயற்றிட்டங்களை செயற்படுத்தும். படுகொலை விவகாரத்தில் பாகிஸ்தான் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்தியளிக்கின்றன என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாகிஸ்தான் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்தினரது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இலங்கை மற்றும் பாகிஸ்தான் அரசாங்கம் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகிறது.

பாகிஸ்தான் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் இழப்பு கவலைக்குரியது. பாகிஸ்தான் நாட்டில் பெரும்பாலான இலங்கையர்கள் தொழில் புரிவதுடன், இலங்கை மாணவர்களும் பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கிறார்கள். இவர்களின் பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பாகிஸ்தான் நாட்டு பிரதமர் உத்தரவாதம் வழங்கியுள்ளார்.

பிரியந்த குமாரவின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய 249 பேர் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் கைது செய்யப்பட்டுள்ளனர். தீவிரவாதத்துடன் தொடர்புடைய சட்டங்களுக்கு அமைய குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடனான வழக்கு விசாரணையை நாளாந்தம் சிறைச்சாலைக்குள் முன்னெடுக்க பாகிஸ்தான் அரசு தீர்மானித்துள்ளது. படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்குவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு பாகிஸ்தான் சியல்கோட் வியாபார வர்த்தக சங்கத்தினர் ஒன்றிணைந்து ஒரு இலட்சம் டொலர் நிதியை வழங்க தீர்மானித்துள்ளனர். பிரியந்த குமார தொழில்புரிந்த நிறுவனத்தில் அவர் பெற்றுக்கொண்ட மாதச்சம்பளத்தை தொடர்ந்து அவரது மனைவிக்கு தொடர்ச்சியான அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

பிரியந்தவின் குடும்பத்தினருக்கு 2.5 மில்லியன் நிதியுதவினை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் அவரது பிள்ளைகளின் கல்வி நலன் திட்டங்கள் குறித்து நீண்டகால திட்டத்தை வகுக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அவ்விடயம் தொடர்பில் அவரது குடும்பத்தாருடன் நாளை பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளேன்.

பாராளுமன்ற அமர்வை நிறைவுறுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி குறித்து பல்வேறு தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். அரசியலமைப்பின் 70ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய ஜனாதிபதி குறித்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

1978ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளும் இந்த அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார்கள். பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

# பங்களாதேஷ் பிரதமருடன் தொலைபேசியில் உரையாடிய பிரதமர் மஹிந்த

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், பங்களாதேஷ் நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கும் இடையில் தொலைபேசி உரையாடல் இடம் பெற்றுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்தல் உள்ளிட்ட காரணிகள் குறித்து பேசப்பட்டதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் வலைத்தளத்தில இது தொடர்பாக பதிவேற்றம் செய்துள்ளார்.

இலங்கையும், பங்களாதேஷூம் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய துறைகள் குறித்து இரு நாட்டு பிரதமர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் நெருங்கிய மற்றும் முக்கியமான நட்பு நாடாக பங்களாதேஷ் வரலாற்றுக் காலம் தொடக்கம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. நட்புறவினை தொடர்ந்து வரவேற்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் பிரதமரிடம் குறிப்பிட்டுள்ளார்.

# முதலைக் கண்ணீர் வடிக்கிறது எதிர்க்கட்சி

## அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே



(இராஜதுரை ஹஷான்)

நல்லாட்சி அரசாங்கத்தில் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து அக்கறை கொள்ளாதவர்கள் இன்று கிராமிய பொருளாதாரம் குறித்து அரசாங்கத்திற்கு பாடம் கற்பித்து முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். 2022ஆம் ஆண்டு முதல் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் புரட்சிகரமான அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிடியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுடன் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி நான்கு மாத காலம் மாத்திரம் தான் சுதந்திரமாக செயற்பட முடிந்தது. முழு உலகிற்கும் தாக்கம் செலுத்தியுள்ள கொவிட் தாக்கத்தை நாமும் எதிர்கொள்ள நேரிட்டது. அபிவிருத்தி பணிகளை தாமதப்படுத்தி மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு காணப்பட்டது.

கொவிட்–19 வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்கும் நோக்கில் கொவிட்–19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. கொவிட்–19 தடுப்பூசி செலுத்தல் நடவடிக்கைகளில் தெற்காசிய வலய நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலையில் உள்ளது. 2022ஆம் ஆண்டு சிறந்த ஆண்டாக அமையும்.

அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களை விமர்சிக்கும் முயற்சிகள் சமூகவலைத்தளங்கள் ஊடாக ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்படுகிறது. போலியான செய்திகளுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் கவனம் செலுத்துவது பயனற்றது.

கிராமிய அபிவிருத்திக்காக 2022ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் பெருந்தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கிராமிய மக்கள் குறித்து கவனம் செலுத்தாதவர்கள் தற்போது கிராமிய மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

சேதன பசளை திட்டத்திற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இரசாயன உரப் பயன்பாட்டில் ஏற்படும் பாரதூர விளைவுகள் குறித்து எவரும் கருத்துரைப்பதில்லை. சேதன பசளை திட்டக் கொள்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது என்றார்.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk



நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுபொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை பொது முகாமையாளர் பதவி**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை பொது முகாமையாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

**1) வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) முகாமைத்துவம். சிவில் பொறியியல். கட்டிடக்கலை விஞ்ஞானம் அல்லது சட்டம் தொடர்பான விடய தானங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதல்நிலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

முகாமைத்துவம். சிவில் பொறியியல். கட்டடக்கலை விஞ்ஞானம் அல்லது சட்டம் தொடர்பான விடயதானங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதுமானிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் (IESL) அல்லது கட்டட கலைஞர் நிறுவகம் (SLIA) பட்டய பொறியியலாளர்கள் (Chartered Engineers) / அல்லது பட்டய கட்டடக் கலைஞர் (Chartered Architect) பூரண அங்கத்துவத்தை பெற்றிருத்தல்.

அத்துடன்

பட்டம் பெற்றபின் அரச கூட்டுத்தாபனமொன்றிலோ அரச நியாயாதிக்க சபையொன்றிலோ. அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றிலோ முகாமைத்துவ மட்டத்தில் குறைந்த பட்சம் இருபது (20) வருடங்கள் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். அதில் குறைந்த பட்சம் 5 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) முகாமைத்துவம். சிவில் பொறியியல். கட்டிடக்கலை விஞ்ஞானம் அல்லது சட்டம் தொடர்பான விட யதானங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முதல்நிலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

முகாமைத்துவம். சிவில் பொறியியல். கட்டிடக்கலை விஞ்ஞானம் அல்லது சட்டம் தொடர்பான விடய தானங்களில் கலாநிதி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

கலாநிதி பட்டத்தை பெற்றுக்கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றிலோ அரசநியாயாதிக்க சபையொன்றிலோ. அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றிலோ சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சிறப்பு உத்தியோகத்தர் தரத்தில் பணியாற்றிய அனுபவம்.

**2) உள்ளக விண்ணப்பதாரிகள்**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் கணிக்கத்தக்க சிரேஷ்ட முகாமைத்துவ செயற்பாடுகளில் திருப்தியான சான்றுகளுடன் குறைந்த பட்சம் 5 வருடங்கள் பணியாற்றியிருக்க வேண்டும்.

அத்துடன்

குழு நடவடிக்கைகளில் தலைமைத்துவதுடன் செயற்படக்கூடிய வல்லமை மனிதவளம் மற்றும் ஏனைய வள முகாமைப்படுத்தலில் தேர்ச்சியுடன் கூடிய இயலுமை.

**சம்பளம்**

HM - 2-1 ரூபா.91,645 - 12 x2,700 = 124,045/-

- சகல அரச கொடுப்பனவுகளுடன் வாழ்க்கைச் செலவும் வழங்கப்படும்.
- எரிபொருளுக்கான கொடுப்பனவுடன் உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்படும்.

**வயது**

35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சகல விண்ணப்பதாரிகளும்**

i) இலங்கை பிரஜைகளாக இருக்க வேண்டும்.
ii) தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நாட்டின் எந்த பகுதியிலும் நிறைவேற்றக் கூடிய மனநலமும் உடல் நலமும் கொண்டிருத்தல் வேண்டும்.
iii) நற்பண்புகளுடனான நன்னடத்தை அவசியம்

**பதவிக்கான பொது நிபந்தனைகள்**

1) இப்பதவி நிரந்தரமானதுடன் ஓய்வூதியம் அற்றது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரிடமிருந்து 10% அறவிடப்படும். தொழில் தருநர் அந்த நிதியத்துக்கு 12% செலுத்துவதுடன் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% செலுத்துவார்.

2) அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரச நியாயாதிக்க சபையை சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை தங்களது பகுதி பிரதானிகள் மூலமாகவே அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரிகள் பற்றிய விபரங்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் விண்ணப்பத்தில் காட்டப்பட வேண்டும்.

கல்வி. அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் தங்களது தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் கல்வி. தொழில் தகைமைகள். அனுபவம் மற்றும் தங்கள் விபரங்கள் அடங்கிய சுய விபரக்கோவையை கடித உறையிலிட்டு. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு **2021.12.31** ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

முடிவுத் திகதிக்குப் பின் இடைக்கும் விண்ணப்பங்கள். பூரணமற்ற விண்ணப்பங்கள். தெளிவற்ற விண்ணப்பங்கள் எவ்வித முன்அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை,**
**முதலாம் மாடி,**
**தேசிய வீடமைப்பு திணைக்களம் கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை. கொழும்பு - 02.**

## இன்றைய சிந்தனை

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

(திருக்குறள்)

**அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.**

VIRAKESARI
வீரகேசரி
2021 டிசம்பர் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751,
011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# மாகாண சபை தேர்தலை தாமதப்படுத்த வேண்டாம்

மாகாண சபைத் தேர்தல் தொடர்ச்சியாக தாமதமடைந்து வருவதாகவும் எனவே அதனை விரைவாக நடத்த வேண்டும் என்றும் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் மாகாண சபை தேர்தல் தொடர்பாக தற்போது கரிசனை செலுத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள்கூட இலங்கை விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைகளுக்கு மக்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றன. அதேபோன்று உள்நாட்டிலும் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சகல அரசியல் கட்சிகளும் விரைவாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றன. ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியமும்கூட விரைவாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில் மாகாண சபை தேர்தல் தொடர்ச்சியாக தாமதமடைந்து வருகின்றமை தொடர்பாக அரசாங்கத்தின் அமைச்சர்களும் அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதில் காணப்படுகின்ற தேர்தல் முறை மாற்றம் தொடர்பான நெருக்கடி நிலைமையே தேர்தல் தாமதமடைவதற்குக் காரணமாக முன்வைக்கப்படுகின்றது. ஆனால் அதனை தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருக்க முடியாது. விரைவாக அது தொடர்பான தேர்தல் சட்ட திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றி மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. காரணம் மக்களின் அன்றாட பொருளாதார வர்த்தக மற்றும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட ஏனைய நிர்வாக செயற்பாடுகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட நிறுவனங்களாக மாகாணசபை முறை காணப்படுகின்றது. எனவே அது அதிகாரிகளின் கீழ் இயங்கும்போது மக்களின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. மாகாண சபைகளில் முன்னெடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் மக்கள் பிரதிநிதிகளினால் எடுக்கப்பட வேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நிலையிலேயே தொடர்ச்சியாக மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்துக்கள் பாராளுமன்றத்திலும் வெளியிடப்பட்டு வருகின்றன. அதற்கு வெளியிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பல்வேறு அமைச்சர்களும் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வருவதைக் காண முடிகிறது.

அந்த வகையில் மாகாண சபை தேர்தல் விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் முறைமை தொடர்பான மாற்றம் குறித்து ஆராய்கின்ற பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவரான தினேஷ் குணவர்த்தன, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதை அரசாங்கமும் விரும்புகின்றது. எனவே எதிர்வரும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதமளவில் பழைய தேர்தல் முறைமையை மீண்டும் புதிய தேர்தல் முறையாக சட்ட தேவைகளை நிறைவேற்றி பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை தேர்தலை தாமதப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது இதில் காணப்படுகின்ற சட்டப் பிரச்சினை காரணமாகவே தேர்தல் தாமதம் அடைந்து வருகிறது. மாகாண சபைத் தேர்தல் தாமதம் அடைவதற்கு கடந்த கால நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் புதிய தேர்தல் முறைமையை மாகாண சபைத் தேர்தலுக்காக அன்று கொண்டு வந்தனர். ஆனால் அந்த முறைக்கு ஏற்ப அவர்களினால் எல்லை நிர்ணய அறிக்கையை முன்னெடுக்க முடியவில்லை. தற்போது அதனால் மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துவதில் சட்ட சிக்கல் காணப்படுகின்றது. தற்போதைய சட்டத்துக்கு அமைவாக புதிய தேர்தல் முறையே நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் அந்த முறையில் தேர்தலை நடத்த முடியாத சூழல் காணப்படுகின்றது என்றும் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

பழைய முறையில் தேர்தலை நடத்தலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன தெரிவிக்கின்றன. ஆனால் நாம் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தோம். பழைய முறையில் தேர்தலை நடத்துவதாயின் அந்த பழைய தேர்தல் முறைமையையே அதாவது விகிதாசார தேர்தல் முறைமையையே தற்போது புதிய தேர்தல் முறைமையாக பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதாவது அமைச்சரவைக்கு அந்த முறையை சமர்ப்பித்து வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக விவாதம் நடத்தி நிறைவேற்ற வேண்டும். பழைய தேர்தல் முறையையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்திலேயே நிறைவேற்ற வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு காணப்படுகிறது. எனவே அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நாம் தற்போதுதான் வரவு–செலவுத் திட்டத்தை முடித்திருக்கின்றோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அந்தவகையில் பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதாக இருந்தாலும் கூட அதனை புதிய தேர்தல் முறைமையாக பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சட்ட தேவைகளை நிறைவேற்றி அதனைச் சட்டமாக்கி தேர்தலை நடத்த வேண்டிய தேவை காணப்படுவதாக அரசாங்கத்தின் சார்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. அப்படியாக சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டால் அதனை உடனடியாக செய்யவேண்டும். சட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது என்று கூறிக் கொண்டு காலத்தை கடத்திக் கொண்டிருக்காமல் விரைவாக அதற்கான செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கடந்த ஒரு மாத காலமாக பட்ஜெட் விவாதம் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு தடை ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டிருந்தது. தற்போது பட்ஜெட் நிறைவேற்றப்பட்டு விட்டது. எனவே மாகாண சபைத் தேர்தலை அதாவது பழைய தேர்தல் முறைமையை மீண்டும் சட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக அவசியமாக இருக்கின்றது. பழைய முறையை கொண்டுவருவதில் பாரிய கடினமான பணிகள் எதுவும் இருக்காது என்றே கூறப்படுகின்றது. அதனை மிக இலகுவாக முன்னெடுக்க முடியும். அதுமட்டுமன்றி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இந்த தேர்தல் முறை மாற்றம் அல்லது இந்த சட்டத்தை திருத்தும் நடவடிக்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அறிவித்திருக்கின்றன. எனவே இந்த கட்சிகளின் அறிவிப்பை சரியான முறையில் பயன்படுத்தி அரசாங்கம் விரைவாக மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதாவது பழைய தேர்தல் முறையை புதிதாக முழுமையாகக் கொண்டு வந்து உடனடியாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்படுகின்றது. அத்துடன் எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன. எனவே அரசாங்கம் இந்த விடயத்தை ஏகமனதாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றி பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அதனையடுத்து விரைவாக தேர்தலை நடத்த வேண்டும் என்பதே இங்கு முக்கியமானதாக இருக்கின்றது.

காரணமாக தொடர்ச்சியாக தேர்தலை தாமதப்படுத்தக் கூடாது. மாகாண சபைகளின் ஊடாக மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் என்பது மக்களின் இறைமையை மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தும் ஒரு கருவியாக காணப்படுகின்றது. அதனை தாமதப்படுத்தாமல் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. தொடர்ந்து சரியான முறையில் மக்கள் சுகாதார வழிகாட்டலை பின்பற்றி நடந்து கொள்ளும் பட்சத்தில் அதிலிருந்து மீண்டு வந்துவிட முடியும் என்ற நம்பிக்கை விஞ்ஞான ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த முடியும். அதற்கான சட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதற்கு சகல அரசியல் கட்சிகளும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை தாமதப்படுத்தக் கூடாது. அது மக்களின் இறைமையை மக்களின் ஜனநாயக உரிமையை பாதிப்பதாக அமைந்துவிடும். எனவே அவசியமான நடவடிக்கைகளை சகல தரப்பினரும் ஒன்றிணைந்து எடுக்க வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# சாணக்கியர்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் தொடர்பில் தெளிவு வேண்டும்

கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இதுவரை காலமும் கூறி, மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த சாணக்கியர்கள் இப்பொழுது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்களது சுயமுரணைக் காட்டுகிறது. இவர்களின் செயற்பாடுகள் இவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலையும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனாவாதிகளின் நிகழ்ச்சிநிரலையும் முன்னெடுத்துச் செல்லும் தரகர்களாகவே முன்னிலைப்படுத்தியிருக்கிறது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தம் குறித்து தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் பட்டம் வழங்கிக்கொள்பவர்கள். அதற்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு தமிழர்களின் இன்றைய யதார்த்தநிலை புரியவேண்டுமென்பதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் குறித்தும் தெளிவு வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1987ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதுவே இப்பொழுது அனைவராலும் பேசப்படும் 13ஆவது திருத்தமாகும். பதின்மூன்றாவது திருத்தம் வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வடக்கு–கிழக்கு இணைந்த ஒரு மாகாணமாகவும் ஏனைய ஏழு மாகாணங்களை உள்ளடக்கி எட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக டெல்லியில் தமிழ் தரப்புக்களுடனான பேச்சுவார்த்தையில் வடக்கு–கிழக்கு என்பது எப்போதும் இணைந்திருக்கும் என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேயே தமிழர் தரப்புகள் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. பின்னர், பதின்மூன்றாவது திருத்தத்தைக் கொண்டுவந்த போது இந்தியாவுடனோ தமிழர் தரப்புகளுடனோ சரியான பேச்சுவார்த்தைகளை நடாத்தாமல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தான் விரும்பியவாறு அரைகுறை அதிகாரப்பரவலாக்கலுடன் தமக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தி அந்தத் திருத்தத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினார்.

அப்பொழுது வடக்கு–கிழக்கு இணைந்த மாகாண சபையை உருவாக்கிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதின்மூன்றாவது திருத்தத்தில் இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஓர் ஆவணத்தைத் தயார் செய்து அன்றைய ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அனுப்பி வைத்தனர். அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமும் பதின்மூன்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆகவே, பதின்மூன்றாவது திருத்தம் என்பது முழுமையான அதிகாரப்பகிர்வு அல்ல என்பதை தமிழர் தரப்பு அன்றே ஏற்றுக்கொண்டது. ஆனால் அது ஒன்று மாத்திரம்தான் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சட்டபூர்வமான, அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களாக இருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தும்படிதான் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

> **ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அளித்துள்ள விளக்கம்**

1950களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகிய பொழுது, தந்தை செல்வா தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். 1976ஆம் ஆண்டுவரையில், அவரது சமஷ்டி கோரிக்கையில் எத்தகைய முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. தந்தை செல்வாவிற்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரச தரப்பால் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாக பிரித்தானியரிடம் தமிழர்கள் இழந்த இறையாண்மையை மீளப்பெறுவதற்கான தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எத்தகைய பொறிமுறைகளோ, திட்டங்களோ, மூலோபாய, தந்திரோபாயங்களோ அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம் பெற்று, தமிழின விடுதலைக்காக போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக்கொண்டும் தவறான கருத்துக்களையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர். 'பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுவதாகவும் மஹிந்த ராஜபக்ஷவே பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலே சென்று இந்த பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறியதாகவும் ஆனால் அவற்றையெல்லாம் மறந்துபோன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்பொழுது கோரிக்கைகளை முன்வைப்பது என்பது தமிழருக்குச் செய்யும் துரோகம்' என்றும் இந்த சாணக்கியர்கள் 11.12.2021 அன்று சுன்னாகத்தில் நடந்த சாணக்கியர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் கூறியுள்ளனர்.

இதே விடயத்தை இவர்கள் இலண்டனிலும் தெரிவித்திருந்தனர். மாகாணசபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக் கொண்டு அதன் பிறகு சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை. ஆனால் அரசாங்கம் அதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது. இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் பதின்மூன்றை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது.

இந்த சாணக்கியர்களின் சாணக்கியத்தை சற்றே திரும்பிப் பார்ப்போம்.

2010ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்தவுடன் அவசர அவசரமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளை சூட்டோடு சூடாக பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்கள் அனுபவித்த கொடுமைகளை நேரடியாகவே கேட்டறிந்ததுடன், இது குறித்து ஐ.நா.விற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் கொடுப்பதற்காக விரிவான அறிக்கை ஒன்றையும் தயார் செய்திருந்தனர். இதனைக் கையளிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு ஐ.நா.விற்குச் செல்லுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று கூட்டமைப்பின் பேச்சாளராகவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமுமாக இருந்த நான் இலங்கைக்கு வெளியில் இருந்த நேரத்தில் அமெரிக்கா ஜெனிவாவிற்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தமது பயணத்தை ஒத்திவைத்ததாக தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் தன்னிச்சையாக அறிவித்தார். ஆயினும் அதனை ஏற்க மறுத்து நாம் ஜெனிவா சென்று பல நாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து மக்களின் நிலை பற்றி தெளிவுபடுத்தினோம்.

2015ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாகத் திகழ்ந்த ரணில் – மைத்திரி கூட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றும் பொருட்டு, ஐ.நா.வால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட காத்திரமான தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டவர்கள் இந்த சாணக்கியர்கள். இதற்கு இவர்கள் சொன்ன காரணம் விசித்திரமானது. சர்வதேச விசாரணை ஏற்கனவே முடிந்துவிட்டது. இனி அதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டியதுதான் வேலை. எனவே நாம் பொறுமையுடன் இருந்து அதற்கான காரியம் ஆற்ற வேண்டும் என்று கூறியதுடன் சர்வதேச விசாரணையில் உள்ளூர் நபர்களும் இருப்பார்கள். அதேபோன்று உள்ளக விசாரணைகளிலும் சர்வதேசத்தவர்களும் இருப்பார்கள் என்று வியாக்கியானம் அளித்தவர்கள். 2015ஆம் ஆண்டின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டாண்டுகள் அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு, பின்னர் மீண்டும் 2017இல் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் கால அவகாசம் வழங்க வேண்டும். அதன் மூலம்தான் நாம் அதனை சர்வதேசத்தின் பிடியில் வைத்திருக்க முடியும் என்று சொல்லி மீண்டும் காலநீட்டிப்பைப் பெற்றுக்கொடுத்தவர்கள்.

2018ஆம் ஆண்டில் அடுத்த சில மாதங்களில் புதிய அரசியல் யாப்பு வரப்போகின்றது. அதில் ஈழம் என்ற சொல்லைத் தவிர ஏனைய அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று கூறியதுடன் இந்த நேரத்தில் காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது என்று சொல்லி அன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றியவர்கள். அன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பின் நகலை அனைவரும் அறிவோம். இதற்கு சமஷ்டிக்குள்ளும் ஒற்றையாட்சி அடங்கியிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்ளும் சமஷ்டி ஒளிந்திருக்கிறது என்று வியாக்கியானம் கூறியவர்கள்தான் இன்று தமிழ்த் தலைமைகளை விமர்சிக்கின்றனர்.

புதிய அரசியல் சாசன வரைபு தொடர்பில் நாம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், வடக்கு–கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே நாங்கள் அதுபற்றி பேசவில்லை என்றும் வடக்கு–கிழக்கை மதச்சார்பற்ற பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று கோரினால் சிங்கள பௌத்த மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும். ஆகவே அந்த விடயங்கள் தொடர்பாக பேசவில்லை என்றும் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பதில் சொல்லப்பட்டது.

யுத்தத்திற்குப் பிற்பாடு வந்த முதலாவது பாராளுமன்றத்தில், மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் 18 சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தினோம். இந்தக் கூட்டங்கள் தோல்வியிலேயே முடிந்தன. ரணில்–மைத்திரி ஆட்சியில் பங்காளியாக இருந்துகொண்டு ஒவ்வொரு வருடமும் புதிய அரசியல் சாசனம் வருமென்றும் பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு என்று உறுதிமொழி வழங்கி வந்தீர்கள். ஆனால் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்தது. இப்பொழுது கோட்டாபய அரசுடனும் பேசுவதற்கு முயற்சிக்கின்றீர்கள். ஆனால் சிங்கள பௌத்த தீவிரவாத எண்ணங்களைக் கொண்ட கோட்டாபய அரசு அதற்கான நேரத்தை இன்னமும் உங்களுக்கு ஒதுக்கவில்லை. ஆனாலும் அவர்களுடன்கூட நீங்கள் பேசுவதற்குத் தயாராகத்தான் இருக்கின்றீர்கள். இப்பொழுது இறுதியாக நீங்கள் அமெரிக்கா, கனடா, இலண்டன் போய் வந்து '2022இல் மாற்றங்கள் நிகழலாம்... ம்...ம்' என்று கயிறு திரிக்கிறீர்கள். இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதற்குப் பின்னர் நடந்த யுத்தத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்காத நீங்களே இப்பொழுது அவர்களைத் துணைக்கு அழைக்கிறீர்கள்.

ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லும் நீங்கள் ஒரு இனவழிப்பு நடந்ததாகச் சொல்ல முடியாதென்றும் சொல்கிறீர்கள். இந்த சாணக்கியர்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவை மேவி வேறு எந்தவொரு நாடும் தலையிடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வரவிருக்கின்ற புதிய அரசியல் சாசனத்தில் பதின்மூன்றை முற்றாகவே நீக்கப்படலாம் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. ஆகவே எமக்குக் கிடைத்த அதிகாரங்களை விட்டுக்கொடுப்பது என்ற முட்டாள்தனத்தை நாங்கள் செய்ய இயலாது. செய்யக்கூடாது.



கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இதுவரை காலமும் கூறி, மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த இந்த சாணக்கியர்கள் இப்பொழுது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்களது சுயமுரணைக் காட்டுகிறது. இவர்களின் செயற்பாடுகள் இவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலையும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனாவாதிகளின் நிகழ்ச்சிநிரலையும் முன்னெடுத்துச் செல்லும் தரகர்களாகவே முன்னிலைப்படுத்தியிருக்கிறது. எனவே எமது மக்கள் இத்தகைய அரசியல் தரகர்களிடம் விழிப்புடன் செயற்பட்டு எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

## திருவருகை காலம்



*திருவருகைக் காலத்தின் மூன்றாம் வாரம் மகிழ்ச்சியின் வாரமாகக் கொண்டாடுகிறோம். கொடுப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி பிறக்கிறது. உண்மையாகக் கொடுப்பவர்களும் உவகைப் பொங்க கொடுப்பவர்களும் தாங்களும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கிறார்கள். கடவுள் தன்னை முழுவதுமாக இம்மனுக்குலத்திற்குக் கொடுத்தார். இந்தக் கொடுத்தலில்தான் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.*

*கடவுளின் கனிந்த அன்பைப் புறக்கணித்து பாவச்சேற்றில் மூழ்கியதால், இஸ்ரேல் மக்கள் அந்நிய நாடுகளுக்கு கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே அவர்கள் தங்களின் உரிமை வாழ்வை இழந்து அகதிகளாக நடத்தப்பட்டனர். அப்போது தங்களின் பாவநிலையை உணர்ந்த இஸ்ரயேல் மக்கள், தங்களின் மீட்புக்காகக் கடவுளை நோக்கிக் கண்ணீர்க் குரல் எழுப்பினர். அவர்களின் அழுகுரலைக் கேட்ட இறைவன், அவர்களை மீட்பதற்காகத் தன் ஒரே மகனை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்களிக்கிறார். ஆகவே பொருளாதார சூழ்நிலையில் பாதிப்புகளை எதிர்கொண்டவர்களுடன் பகிர்தலை மேற்கொண்டு அவர்களிடத்தில் கிறிஸ்துவைக் காண்போமாக.*

கொ.றோமினி





சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசாவின் ஞாபகார்த்தமாக தந்தை செல்வா நற்பணி மன்றம் அண்மையில் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கினை நடத்தியிருந்தது. இதில் கலந்துகொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது பாரியாரின் உருவப்படத்துக்கு மாலை அணிவிப்பதையும் அவர் கௌரவிக்கப்பட்டதையும் நிகழ்வில் பொற்பணிசெம்மல் விருது பெற்றவர்களான சிவப்பிரகாசம் (பிரதி அதிபர்), அஞ்சலோ ஜேசுதாசன் (வங்கி முகாமையாளர்), டி.ஆர்.டீ.பிரதீப் பெரேரா (கிராம அதிகாரி), சாருமதி சசிதரன் (கிராம அதிகாரி), கா.ஜெ.சிவ ராஜேஸ்வரன் (சமூக சேவையாளர்) உட்பட மன்றத்தலைவர் நிலாம், பொதுச்செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம், பிரதி தலைவர் சத்தியமூர்த்தி, லயன் ரவீந்திரன், நிர்வாகச் செயலாளர் புவனேஸ்வரி ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு : ஜே.சுஜீவகுமார்)

# பன்னாட்டு இராஜதந்திரிகளை சந்தித்தார் பிரதமர்




(இராஜதுரை ஹஷான்)

இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஆகியோர்களுக்காக வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நத்தார் தின விசேட சந்திப்பு மற்றும் விருந்துபசாரம் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம் பெற்றது.

நத்தார் தின விசேட நிகழ்வின் பிரதம அதிதிகளாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரதமருடன் கலந்துரையாடினர்.

நிகழ்வில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான அலிசப்ரி, நிமல் சிறிபால டி சில்வா, பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, சுரேன் ராகவன் மற்றும் பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அந்நிய நாடுகளைத் தலையிடக்கோருவது

# மேலும் ஆபத்தை விளைவிக்கும்

## எச்சரிக்கிறார் ஆனந்தசங்கரி

அந்நிய நாடுகளின் அழுத்தத்தைப் பிரயோகிக்கச் சொல்லி கோருவது முட்டாள்த்தனமான செயற்பாடாகும். இது உள்ளூர் அரசியல்வாதிகளையும் பெரும்பான்மை இன கடும்போக்காளர்களையும் கோபமடையச் செய்யும் செயலாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்சங்கரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவுசெய்து நிறுத்திக்கொள்ள வேண்டும். ஒரு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதை நினைக்கும் பொழுது வேதனையை தருகின்றது.

அந்நிய நாடுகளின் அழுத்தத்தை பிரயோகிக்க சொல்லி கோருவது முட்டாள்த்தனமான செயற்பாடாகும். இது உள்ளூர் அரசியல் வாதிகளையும் பெரும்பான்மை இன கடும்போக்காளர்களையும் கோபமடைய செய்யும் செயலாகும். அதுமட்டுமல்ல குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள புரிந்துணர்வை சிதைக்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும். இலங்கை ஒரு இறைமையுள்ள நாடாகும். எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் தலையிடுவதை இலங்கையும் விரும்புவதில்லை. குறிப்பிட்ட நாடுகளும் இந்த விடயத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கும். இந்த விடயம் அனைத்து தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் மக்களை முட்டாள்களாக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும்.

எந்த ஒரு காலகட்டத்திலும் சமஸ்டி என்ற பேச்சிற்கே இடமில்லை என்று அனைத்து தரப்பினரும் கூறிய பின்பும் 'சமஸ்டியை பெற்றே தீருவோம்' என்று அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டார். அதற்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்ட கூட்டமைப்பினர் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து ஒற்றையாட்சிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட மகிந்தவை வெற்றிபெறச் செய்தனர். இருந்தும் 49 சதவீதத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் சமஸ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வரலாற்று தவறை செய்த கூட்டமைப்பினர் இன்று சமஸ்டிக் கோரிக்கையை வைத்து கொக்கரிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. சமஸ்டி பற்றி பேசும் அருகதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு கிடையாது. இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் கூடிப்பேசுவது பெரும் வியப்பாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு இன்று வரை இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வையே முன்வைத்து வருகின்றது. இதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத்தரப் போவதில்லை. பெருமளவு சிங்கள மக்களும் அரசியல் தரப்பினரும் ஒரு காலத்தில் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இன்று இலங்கையிடம் சமரசமாக பேசிப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும் என்றார்.



# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட 42பிரிவுகளின் தொழிலாளர்கள்







(அட்டன் நிருபர்)

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் 12 தோட்டங்களைக் கொண்ட 42 பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று (13) திங்கட்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கட்சி மற்றும் தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒத்துழைத்து இந்த பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தொழிலாளர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் இழுபறி நிலையாக இருப்பதாகவும் தற்போது தேயிலை மலைகள் காடாகிக் கிடப்பதால் 20கிலோ கொழுந்து பறிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு, வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களே வேலை வழங்குவதனால் பெரும் பொருளாதார சிரமத்துக்கு மத்தியில் நிம்மதியை தொலைத்துவிட்டு வாழ்ந்து வருவதாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் தமக்கு சாதகமான பதிலை பெற்றுத் தருமாறு கோரியும் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் கட்டாயமாக வேண்டும் என வலியுறுத்தியும் இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்ததாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன் உள்ளிட்ட இ.தொ.கா.வின் குழுவினர் போராட்டத்தின் களநிலமைகளை பார்வையிட்டதுடன் தொழிலாளர்களுடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.

உரம், கிருமிநாசினி இறக்குமதி

# தனியார் நிறுவனங்களுக்கு வழங்கிய அனுமதியை மீள்பரிசீலனை செய்யுங்கள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம்



(நுவரெலியா நிருபர்)

அரிசி விலையையும் கோதுமை மாவின் விலையையும் பால்மாவின் விலையையும் நிர்ணயிப்பது அரிசி, கோதுமை மா, பால்மா விற்பனையாளர்களே. அதேசந்தர்ப்பத்தை இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதியாளர்களுக்கும் வழங்கக் கூடாது. ஆகவே இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதியை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கிய அனுமதியை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் வெளிநாடுகளிலிருந்து இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகளை அரசாங்கம் நேரடியாக இறக்குமதி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கியது. ஆனால் தற்போது அரசாங்கம் தனியாருக்கு இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியதால் இறக்குமதியாளர்கள் தான் உரத்தின் விலையையும் கிருமிநாசினியின் விலையையும் தீர்மானிப்பார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் உரம் இறக்குமதிக்கான அனுமதியை தனியாருக்கு வழங்கியதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டங்களில் வழங்கப்படும் சம்பளம் போதாமையால் மேலதிக வருமானமாக சிறிய தோட்டங்களில் மரக்கறி உற்பத்தி செய்வதும் பசு மாடுகள் வளர்ப்பதும் பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். எனவே பெருந்தோட்டப் பகுதியில் மரக்கறி உற்பத்தி மற்றும் பசு மாடுகள் வளர்ப்புத் திட்டத்தையும் ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருந்தோட்டப் பகுதியில் மாட்டுக் கொட்டில்கள் அமைப்பதற்கும் நல்ல இன கறவைப் பசுக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை திறந்து கைத்தொழில் பேட்டைகளை நிர்மாணிப்பதன்மூலம் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு சாத்தியமாகும் என்றார்.




# தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பங்காளிகளுடன் ஆலோசிப்பதில்லை



## அரசாங்கத்தின் மீது பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

(அட்டன், தலவாக்கலை நிருபர்)

கூட்டணியாக பயணித்துக்கொண்டிருக்கும் சமகாலத்து அரசாங்கம் அதிமுக்கிய தீர்மானங்களை எடுக்கும் பட்சத்தில் அது குறித்து பங்காளிக்கட்சிகளுடன் எந்த வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்வதில்லை. மாறாக அரசாங்கம் அண்மைக் காலமாக தன்னிச்சையாகவே பயணிக்கிறது என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

தலவாக்கலை, அக்கரப்பத்தனையில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பேராசிரியர் இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதியாக பதவிவகித்த காலப்பகுதியில் அரசாங்கமாக தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பதாக பங்காளிக்கட்சிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வார். அனைத்து தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற்றே தீர்மானங்களை அறிவிப்பார்.

ஆனால் இன்று அவ்வாறான நடைமுறையை நடப்பு அரசாங்கத்தில் காணமுடியவில்லை. ஆதலால் அரசாங்கத்துக்குள் இருக்கின்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு முடியாதுள்ளது.

தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் பாரிய சரிவுப்பாதையில் பயணிக்கின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர். இவ்வாறு பலதரப்பட்ட பிரச்சினைகள் உள்ளன.

இவை தொடர்பில் பேசுவதற்கோ ஆலோசனைகளை முன்வைப்பதற்கோ எமக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. எனக்கு உறுதியளித்ததன்படி எதுவும் இடம்பெறவில்லை. அமைச்சரவையில் எனக்கு எந்தவித பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை. நான் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே. ஆகவே அமைச்சரவையில் எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை வழங்கவும் முடியாதுள்ளது.

மக்கள் சிரமத்துக்குள் விழுவதை தடுக்க என்னிடம் பல யோசனைகள் உள்ளன. கொவிட் சமூகத்தில் பரவலடையும் போது அதனை தடுப்பதற்கு பிரத்தியேக வேலைத் திட்டம் ஒன்றை அமுலாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தேன். எனினும் அது தொடர்பான எனது ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனது ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருக்குமானால் நாட்டின் நிலைமை இன்றையளவில் கடினமாய் இருந்திருக்காது என்றார்.

# கொத்மலை மத்தியஸ்த சபை உறுப்பினராக நியமனம்



கொத்மலை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசாமி நடராஜா, கொத்மலை பிரதேச மத்தியஸ்த சபையின் உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். நீதியமைச்சின் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள இந்நியமனத்தை உதவி பிரதேச செயலாளர் கடந்த சனிக்கிழமை (11) வழங்கிவைத்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான துரைசாமி நடராஜா, தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோவை பூர்த்தி செய்துள்ளதோடு விசேட கல்வி டிப்ளோவை பாடநெறியையும் பூர்த்தி செய்துள்ளார். அத்தோடு கணிதத்துறையிலும் விசேட பயிற்சி பெற்றவராகவும் இவர் விளங்குகின்றார். ஆசிரியராக, அதிபராக கடமையாற்றியுள்ள இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் விசேட கல்வி வளவாளராகவும் நீண்ட காலமாக பணியாற்றியுள்ளார். இவற்றுடன் வீரகேசரியின் கொத்மலை பிரதேச நிருபராகவும் பணியாற்றி வருகின்றார்.

மலையக மக்களின் பாரம்பரிய கலைத்துறை குறித்து அதீத ஈடுபாடு கொண்ட துரைசாமி நடராஜா இவற்றை பேணிப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். இவரின் இந்த முயற்சிக்காகவும் பத்திரிகைத் துறை செயற்பாடுகளுக்காகவும் பல விருதுக ளையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனைப் பிராந்தியத்தில் வெள்ள அபாயம்; முகத்துவாரங்கள் திறப்பு; மக்கள் இடம்பெயர்வு



(சாய்ந்தமருது மேலதிக நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக கல்முனைப் பிராந்தியத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை போன்ற பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) பிற்பகல் தொடக்கம் நேற்று திங்கட்கிழமை (12) மதியம் வரை பெய்த பலத்த மழை காரணமாக சில வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளதால் பொதுமக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி வருகின்றனர். சாய்ந்தமருது பொலிவேரியன் புதிய குடியிருப்புக் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கல்முனையையும் கொலனிப்பகுதிகளையும் இணைக்கும் கிட்டங்கிப்பால வீதி மற்றும் கல்முனை அம்பாறை நெடுஞ்சாலையிலுள்ள மாவடிப்பள்ளி பாலம் என்பவற்றுக்கு மேலாக வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.இந்த வெள்ள நிலைமையை கருத்தில் கொண்டு, நேற்று சாய்ந்தமருது பிரதான முகத்துவாரம் உட்பட கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள அனைத்து முகத்துவாரங்களையும் திறந்து, வெள்ள நீரை கடலுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை மேற்கொண்டிருந்தது.

அத்துடன் ஏலவே துப்புரவு செய்யப்பட்டு, மீண்டும் குப்பைகளினாலும் மண் திட்டுகளினாலும் அடைபட்டுள்ள வடிகான்கள் துரிதமாக சீர்செய்யப்பட்டு வருகின்றன. கல்முனை மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் மாநகர சபையின் சுகாதார மற்றும் வேலைப் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் இதற்காக முழுநேரப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.அதேவேளை குறுக்கு வீதிகளிலும் சிறிய ஒழுங்கைகளிலும் அமைந்துள்ள வீடு, வளவுகளில் இருந்து வெளியேற முடியாதிருக்கின்ற வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழை வீதிகளில் வெள்ளம்; போக்குவரத்தும் பாதிப்பு



(பெரியபோரதீவு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.இதனால் போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதுடன் நீர் நிலைகளின் நீர் மட்டமும் உயர்ந்துள்ளன.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட மண்டூர் – வெல்லாவெளி பிரதான வீதி, றாணமடு – மாலையர்கட்டு பிரதான வீதி, றாணமடு – 16 ஆம் கிராமம் பிரதான வீதி, ஆனைகட்டியவெளி – சமிளையடி வீதி உள்ளிட்ட பல வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை(13) காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலத்தில் 78.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி சு.ரமேஸ் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்யும் கடும் மழை காரணமாக நவகிரிக் குளத்தின் நீர் மட்டம் 22அடி 5அங்குலமாகவும் தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் 14அடி ஆகவும் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 27அடி 7அங்குலமாகவும் உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 13அடி 3அங்குலமாகவும் வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 16அடி 9அங்குலமாகவும் கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் 10அடி 6அங்குலமாகவும் கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 6அடி 3அங்குலமாகவும் வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 14அடி 5 அங்குலமாகவும் புனானை அணைக்கட்டின் நீர்மட்டம் 7அடி 1அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுகல் ஓயாவின் 2 வான்கதவுகள் 4 அங்குலம் அளவில் திறக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து வெளியேறும் நீர் நவகிரிக் குளத்துக்கு வந்து சேர்வதாகவும் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# கணவனின் கொலைக்கு அரசாங்கம் நீதியைப்பெற்றுத்தர முன்வரவேண்டும்

## மலேசியாவில் உயிரிழந்தவரின் மனைவி வேண்டுகோள்



(பட்டிருப்பு நிருபர்)

மலேசியாவில் அடித்துக்கொல்லப்பட்ட தனது கணவனுக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என அவரது மனைவி பிருந்தாஜினி விவேகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது உயிரிழந்தவரின் மனைவி மேலும் தெரிவிக்கையில்,

முதலில் பாகிஸ்தானில் கொடூரமாக கொல்லப்பட்டவருக்கு எனது குடும்பம் சார்பாக அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றேன். மலேசியாவில் 2020.09.06ஆம் திகதி எனது கணவரை கொடூரமாக தாக்கி கொலைசெய்திருந்தார்கள்.தகப்பனை பத்து வயதில் இழந்த மகனும் அவனது தாயும் இன்று அது தொடர்பில் நீதிகோரி வந்துள்ளோம்.எனது கணவன் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் எனக்கு எந்தவிதமான உதவியோ நீதியோ இதுவரை கிடைக்கவில்லை.

பாகிஸ்தானில் அண்மையில் கொல்லப்பட்ட சகோதரருக்கு ஆதரவாக பலர் குரல் கொடுத்துள்ளனர்.ஆனால் எனது கணவருக்கு ஆதரவாக யாரும் ஏன் குரல்கொடுக்க முன்வரவில்லையென்ற கேள்வி எனக்குள் எழுந்துள்ளது.நான் இங்கு இனவாதம்பேசவில்லை.பாகிஸ்தானில் கொல்லப்பட்டவர் ஒரு சிங்களவர் என்ற அடிப்படையிலா அனைவரும் குரல்கொடுத்தார்கள். நான் வறுமை நிலையில் உள்ள பெண் என்ற காரணத்தினால் எனக்கு ஆதரவு வழங்க முன்வரவில்லையா? எனது கணவருக்கு ஏற்பட்ட அநீதிக்கு எனக்கு நீதி கிடைக்கவேண்டும் என இலங்கை ஜனாதிபதியிடம் நான் கையெடுத்து கும்பிட்டு கேட்கின்றேன்.அன்று அரசாங்கம் எனக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்திருந்தால் இன்று பாகிஸ்தானில் குறித்த சிங்கள சகோதரர் கொல்லப்பட்டிருக்கமாட்டார்.அன்று அதற்கான நடவடிக்கை எடுத்திருந்தால் இலங்கையைச் சேர்ந்த எவரையும் தொடுவதற்கு அச்சப்பட்டிருப்பார்கள்.

உலக நாடுகளில் உள்ள உறவுகளிடம் பிச்சையெடுத்தே எனது கணவனின் உடலை மலேசியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவந்தேன்.

எனது மகன் மூன்று வயதாக இருக்கும் போது மலேசியாவுக்கு சென்று பெட்டியில் சாமான்கள் அனுப்புகின்றேன் என்று கூறிவிட்டுச்சென்றவர் இறுதியாக பெட்டியில் வந்தார். அவரது சடலத்தை வீட்டுக்குக் கூட கொண்டுவரமுடியாமல் கொழும்பில் இறுதிச்சடங்கினை செய்தோம்.

பாகிஸ்தானில் இடம்பெற்ற சம்பவத்துக்கு பாகிஸ்தான் அரசாங்கம் மன்னிப்புக் கூட கேட்டுள்ளது.ஆனால் எனக்கு எந்த விதமான ஆதரவும் கிடைக்கவில்லை. எனது கணவனை கொலைசெய்தவர்கள் யார் என்பது கூட தெரியாத நிலையுள்ளது.எனது கணவனின் படுகொலைக்கு எனக்கு நீதி வேண்டும்.எனக்கு வழங்கப்படும் நீதியானது இலங்கையின் ஒவ்வொரு பெண்ணுக்கும் நீதியைப்பெற்றுக் கொடுக்கும்.

எனவே எனது கணவனின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் நீதியைப்பெற்றுத்தர வேண்டும் எனவும் தெரிவித்தார்.





கல்முனை உவெஸ்லி உயர்தர தேசியப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வடிவேல் பிரபாகரனின் சேவை நலன் பாராட்டு விழாவும் "பிரபாகம்" சிறப்பு மலர் வெளியீடும் கல்லூரி முதல்வர் செ. கலையரசன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் அதிபர் கௌரவிக்கப்படுவதையும் வரவேற்பு நடனம் வழங்கிய உயர்வகுப்பு மாணவியரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :துறைநீலாவணை நிருபர்)

# காரைதீவு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

(காரைதீவு நிருபர் )

காரைதீவு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இரண்டு மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

காரைதீவு பிரதேசசபையின் 46ஆவது மாதாந்த அமர்வு நேற்று(12)திங்கட்கிழமை சபைத்தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.இதன்போது 2022ஆம் ஆண்டுக்கான வரவு வெலவுத்திட்ட அறிக்கையை தவிசாளர் சமர்ப்பித்து உரையாற்றிய பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 7 வாக்குகளும் எதிராக 5வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஆதலால் 2மேலதிக வாக்குகளால் வரவு செலவுத்திட்டம் நிறைவேறியது.



யாழ். போதனா வைத்தியசாலையில் நத்தார் தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், குருக்கள், துறவிகள், வைத்தியர்கள் கலந்துகொண்ட போது எடுத்த படம்... (எம்.நியூட்டன்)

## தேசிய ரீதியில் யாழ்.செயலகம் முதலிடம்

# அரசாங்க அதிபர் தலைமையில் உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு



(எம்.நியூட்டன்)

தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம் பெற்றதை முன்னிட்டு மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்கள் பாராட்டப்பட்டதுடன் கேக் வெட்டிக் கொண்டாடினர்.

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2018/2019 ஆம் ஆண்டினை தழுவி நடத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ். மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றதை முன்னிட்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று காலை 11 மணியளவில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், செயலக உத்தியோகத்தர்கள், உற்பத்தித் திறன் பிரிவு அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். இதன் போது உற்பத்தித்திறன் குழுவினருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# வடக்கில் கொவிட் 3 ஆவது தடுப்பூசி வழங்கல் ஆரம்பம்

(ஐ.சிவசாந்தன்)

30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாவது கொவிட்–19 தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் நேற்று வடமாகாணத்தில் ஆரம்பமானது. அந்தவகையில் யாழ்.மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுகளில் குறிப்பிட்ட வயதையுடையவர்கள் இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர்.

இவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்றுமாத இடைவெளியின் பின்னர் இத்தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம். இரண்டு தடவைகள் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் கொவிட்19 தொற்றிற்குள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 06 மாதகால இடைவெளியின் பின்னர் இத்தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபாம் அல்லது ஏதாவது ஒரு கொவிட்–19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு இத்தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் மக்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் மேற்குறிப்பிட்டவர்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது அவர்களால் அறிவிக்கப்படும் நிலையங்களில் இன்றும் மற்றும் தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் யாழ். மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



30 வயதிற்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு செய்திகள்

# மன்னாரில் காணாமற்போன இரு மீனவர்களும் சடலங்களாக மீட்பு

(தலைமன்னார் நிருபர்)

மன்னாரில் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த சக மீனவரும் அவரைக் காப்பாற்றுவதற்காக கடலில் குதித்து காணாமல்போன இன்னொரு மீனவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளையில் மூன்று மீனவர்கள் தங்களின் வெளியிணைப்புப் படகின் இயந்திரத்தை பரீட்சித்துப் பார்க்கும் நோக்குடன் கோந்தப்பிட்டி கடலுக்கு படகில் சென்றுள்ளனர். இச் சமயம் படகு கால்வாய் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது படகின் இயந்திரம் பழுதடையவே மீனவர் ஒருவர் இயந்திரத்தின் சாவியை எடுத்து வருவதற்காக கடலில் பாய்ந்து கரைக்குவர எத்தனித்த வேளையில் சுழிக்குள் அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருந்தார்.

இதைக் கண்ணுற்ற மற்றைய மீனவர் அவரை காப்பாற்ற தானும் கடலில் குதித்த வேளையில் அவரும் சுழிக்குள் அகப்பட்டு இருவரும் காணாமல்போயிருந்தனர். இதனையடுத்து கடற்படையினர், பொலிஸார் மற்றும் சக மீனவர்கள் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை வின்சன் நந்தகுமார் அன்ரனி தர்சன் (வயது 19) என்பவர் மன்னார் தென்கடல் பகுதியில் சடலமாக கரை ஒதுங்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டார். அதேவேளையில் மற்றைய மீனவரான வி.செந்தூரன் (வயது 27) என்பவரும் நண்பகல் வேளையில் சடலமாக மீட்கப்பட்டார். இவர்களுடன் சென்ற மற்றைய மீனவர் படகுடன் கரை சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருவரின் சடலங்களும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்ட இருவரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்.செயலகத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கலந்துரையாடல்



(ஐ.சிவசாந்தன்)

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட தரப்புக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் 43 நபர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களான உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியவர்கள் கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தனர்.

கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் காணொளி மற்றும் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# நினைவு கூருவதற்கான அவர்களது உரிமை: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களும், பாதிக்கப்பட்டப் பெண்களும்

இலங்கை பல தசாப்தங்களாக எதிர்கொண்ட நீடித்த சிவில் யுத்தத்தினை மீளநினைவூட்டும் அதிர்ச்சிகரமான சம்பவம் 21 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2019 நடந்தேறியது. இந்த அண்மைய அனுபவத்தை ஒருவர் மிகவும் அச்சுறுத்தலாகக் கருதலாம். ஏனெனில், அதனால் ஏற்பட்ட பயம் இன்றும் நீடிக்கின்றது. சுமார் மூன்று வருடங்களாக ஆறு ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பின்னர், பாதிக்கப்பட்டுத்-தப்பிப் பிழைத்தவர்களுக்கு நீதி கிடைத்ததா என ஒருவர் ஆச்சரியத்துடன் கேட்கலாம்.

**நினைவுகூரல் - பெண்களுக்கு என்ன வேண்டும்?**

நீர்கொழும்பிலுள்ள ஒரு கன்னியர் மடத்தைச் சேர்ந்த சகோதரி ஒருவர், அத்தகைய நிகழ்வுகளில் இருந்து குணமடைய வேண்டியதன் அவசியத்தை விளக்குகிறார். "நாம் மீட்சி அல்லது குணமடைதல் பற்றி பேசும்போது, இதனையும் ஒரு உடல் காயத்தைப் போலவே பார்க்க வேண்டும். உடலில் ஏற்பட்ட காயத்திற்கு, அதனை சுத்தம் செய்து மருந்து இடவில்லையென்றால், தொற்று அதிகரித்து, புற்றுநோயாகக் கூட மாறலாம். அதைப்போலவே இதனையும் அணுக வேண் டும்" என்றார்.

"நினைவுகூரல்" என்பது குறித்த துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அல்லது நிதி அனுசரணையாளர்களால் மாத்திரமே புரிந்துகொள்ளப்படும்வாசகமாகத்தோன்றலாம். இருப்பினும், அடிமட்ட மக்களுடனான உரையாடல் இதற்கு எதிர்மறையான தோற்றப்பாட்டைத் தருகின்றது. இது அவர்களால் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக இல்லாவிட்டாலும், தாம் இழந்த அன்புக்குரியவர்களை நினைவுபடுத்துவதும், அவர்களை நினைவுகூருவதும், பாடங்கள் கற்றுக்கொள்ளப்படுவதனையும், அது மீண்டும் நிகழாதிருப்பதனை உறுதி செய்வதுமே அவர்கள் எதிர்பார்க்கும் விடயங்களாக இருக்கின்றன. என்ன நடந்தது என்பதனை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சமூகம் அந்தச் சம்பவத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்று எதுவும் நடக்காமல் தடுக்க வேண்டும் என்றும், அந்த நோக்கத்திற்காக அனைவரும், அதிகாரத்தில் உள்ளவர்களும் மூலக்காரணிகளை அடையாளங் காண வேண்டும் எனவும் அவர்கள் விரும்புகிறார்கள்" என தப்பிப் பிழைத்தவர்களுக்கு சேவை செய்யும் அமைப்பு ஒன்றின் தலைவர் தெரிவித்தார்.

நினைவுகூரலில் பெண்களின் எதிர்பார்ப்புகள் குறித்து கேட்கப்பட்ட போது, "அனைத்து வீடுகளிலும் இறந்தவர்களின் புகைப்படங்கள் உள்ளன. இது போன்ற ஒரு பயங்கரமான நிகழ்வு மீண்டும் நிகழக்கூடாது என்பதனை முழுச் சமூகத்திற்கும் நினைவூட்டுவது மிகவும் முக்கியமானது" என உளவளத்துணை ஆலோசகர் ஒருவர் கூறுகின்றார்.

நினைவுகூரலின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கும் போது, "நினைவூட்டல் என்பது வன்முறையைத் தடுப்பதன் ஒரு பகுதியாகும். நடந்ததை மறந்து விட்டால், மீண்டும் நிகழும் வாய்ப்பு மிக அதிகம். மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த தனிப்பட்ட அதிர்ச்சி மற்றும் கூட்டு அதிர்ச்சியை மக்கள் நினைவில் கொள்ள மாட்டார்கள்" என மனநல வைத்தியர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

**தனிப்பட்ட மட்டத்தில் நினைவுகூரல்**

"நினைவுகூரல் என்பது நீங்கள் இழந்த நபரை நினைவு கூருவதற்கான ஒரு வழியாகும், இது நினைவுகளை மட்டு மல்ல, அந்த நபரின் வாழ்க்கையின் அர்த்தத்தையும் மீட்டலுக்கான ஒரு வழியாகும்" என உளச்சமூக பயிற்சியாளர் ஒருவர் நம்புகிறார். "அர்த்தமுள்ள" நினைவுச்சின்னம் என்றால் என்ன என்பதை விளக்கும் அவர், "புகைப்படங்கள் மற்றும் நினைவுகள் அல்லது சம்பவங்களில் நினைவில் கொள்ள விரும்புவது மட்டுமல்லாமல், சமூகத்திற்கு அவர் என்ன வகையில் பங்களிப்புச்செய்தார் என்பதை படம்பிடித்து, அந்த நபரால் எவ்வகையில் பங்களிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்" எனத் தெரிவித்தார்.

தொலைந்துபோன தன் குடும்பத்திற்கான நோக்கத்தைக் கண்டுபிடிப்பதற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்து மாற்றிக் கொண்ட ஒரு பெண்ணைப் பற்றி அவர் விவரித்தார். "என் குழந்தைகளும் கணவரும் இந்த உலகில் செய்தவற்றிற்காக நான் குரல் கொடுக்க வேண்டும்" என்று அவள் சொல்ல ஆரம்பித்தாள். எனது குடும்பத்தை எந்த நோக்கமும் இல்லாமல் இறப்பதற்கு அனுமதிக்க முடியாது. அவர்கள் யார், அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை நான் உலகுக்கு தெரியப்படுத்த வேண்டும். இவர்கள் உண்மையான மனிதர்கள், அவர் எப்படிப்பட்ட கணவர் என்பதையும், அவர்கள் எனக்கு எந்த வகையான மகள் மற்றும்மகன் என்பதையும் மக்கள் அறிந்திருக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்" என அவர் குறிப்பிட்டார்.

தப்பிப்பிழைத்தவர்களுடன்பணிபுரியும்மற்றொருஉளச்சமூக பயிற்சியாளர், தனது முழு குடும்பத்தையும் இழந்த ஒரு பெண்ணின் அனுபவங்களை விவரிக்கிறார் தனது அன்புக்குரியவர்களை சமூகத்தில் அவர்களின் இருப்புக்கு மதிப்பைக் கொண்டுவரும் விதத்தில் எவ்வாறு நினைவுகூர வேண்டும் என்பதை அவர் மேலும் விளக்குகிறார் - "உதாரணமாக, இந்த மக்கள் "அத்தகைய திறன்களை", "அத்தகைய நல்ல குணங்களுடன்", "அவர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள்" என்று அவர்கள் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். மேலும் குழந்தைகள் கல்வியில் எவ்வளவு வெற்றியடைந்தவர்களாக இருந்தார்கள் என்பதை குடும்பங்கள் தொடர்ந்து நினைவுகூர வேண்டும்.

**குற்றம் சாட்டும் விளையாட்டின்றி நினைவுகூரல்**

மேலும், அவர் நினைவுகூரலில் ஒரு முக்கிய அம்சத்தைச் சுட்டிக்காட்டுகிறார்: "நினைவுகூரல் குற்றம் சாட்டி விளையாடாமல் நடக்க வேண்டும். இந்த நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்கள் (ஊடகங்கள் / ஊடகவியலாளர் சந்திப்புகள்) இழப்பை ஒப்புக் கொள்வது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அதைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். குறிப்பாக இது போன்ற நிகழ்வுகளில், சூழல் மிகவும் அரசியல் இயல்புடைய நிலையில், பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களின் இந்த பாதிப்புகள், குறிப்பாக பெண்களின் பாதிப்புகள், சமூகங்கள், அரசியல் கட்சிகள், ஊடகங்கள் அல்லது சமூகங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படவோ, தவறாக சித்தரிக்கப்படவோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்படவோ கூடாது. "அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் அவர்கள் பேச விரும்பாத நேரங்கள் இருந்தன" என ஒரு வணக்கத்துக்குரிய சகோதரி ஒருவர் குறிப்பிடுகிறார்.

தேவாலயம் ஒரு நிறுவனமாக மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்கள், சம்பவத்திற்கு எதிர்வினையாற்றிய விதம் குறித்து பணிபுரிந்தவர்கள் ஒரு கருத்தை மீண்டும் வலியுறுத்துகின்றனர். "அவர்கள் யாரையும் சுட்டிக்காட்டவில்லை அல்லது என்ன நடந்தது என்பதற்கு யாரையும் குற்றம் சாட்டவில்லை. அவர்கள் நிலைமையை மிகவும் அமைதியாக கையாண்டனர். இது அவர்கள் கோபப்படவில்லை என்று கூறவில்லை, ஆனால் பொது இடங்களில் தங்கள் உணர்வுகளை எப்படி கையாள்வது என்பது அவர்களுக்குத் தெரியும்" என குறிப்பிடுகின்றனர். இது சமூகங்களுக்குள்ளும் மற்றும் சமூகங்களுக்கு மத்தியிலும் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்திற்கு வழிவகுக்கிறது. ஏனெனில் "குணப்படுத்துதல் பல்வேறு அடுக்குகளையும் அம்சங்களையும் கொண்டுள்ளது."

**சமுதாய மட்டத்தில் நினைவுகூரல்**

"இது ஒரு பொதுத் துன்பியல் சம்பவம் என்பதால், அவர்கள் தாம் இழந்த அன்புக்குரியவர்களைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் வாய்ப்பைச் சமூகம் வழங்க வேண்டும்" என்று ஒரு உளச்சமூக பயிற்சியாளர் கூறுகிறார். நினைவேந்தலின் ஒரு வழியாக இழப்பை பொதுமக்கள் ஒப்புக்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில், நீர்கொழும்பில் உள்ள கன்னியர் மடத்திலுள்ள சகோதரியின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வை நேர்காணல் செய்த இருவர் நினைவு கூர்ந்தனர். தங்கள் உயிரை இழந்தவர்கள் மற்றும் தாக்குதலில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகையை ஏற்பாடு செய்தனர். உயிரிழந்த குழந்தைகளின் பெயரில் உதவித்தொகை வழங்கப்பட்டது. இது முக்கியமானது, ஏனென்றால் இந்தப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பட்டப்படிப்பு அல்லது திருமணத்தைப் பார்க்கப் போவதில்லை. எனவே, இந்த நிகழ்வு மிகவும் நல்ல முறையில் அவர்களின் நினைவில் இருக்கும். அவர்கள் துக்கத்தில் இருந்தாலும், உயிர் இழந்த குழந்தைகளின் பலத்தையும் கொண்டாடும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு, பாதிக்கப்பட்டக்குழந்தையின் பெற்றோரும் நெருங்கிய நண்பர் களும் எதிர்காலத்தில் திரும்பி வரக்கூடிய ஒரு சாதகமான நினைவகமாகும்.

"ஒரு பெரிய குழுவில் அதிர்ச்சி ஏற்படும்போது, குழு நினைவு கூரல் அவர்களின் துயரத்தையும் இழப்பையும் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது. இந்த துயரப் பகிர்வு அனுபவத்தில் உள்ள ஒற்றுமையின் காரணமாக ஒரு பிணைப்பை உருவாக்குகிறது" என வைத்தியர் ஒருவர் தனது அனுபவத்தில் நம்புகின்றார். "வாராந்தக் குழு குணப்படுத்தல் அமர்வுக்காக இல்லாவிட்டால் வீட்டை விட்டு வெளியே வரமாட்டேன்" என்று குறிப்பிட்ட சில பாதிக்கப்பட்டப் பெண்களை அவர்கள் எப்படிக் கண்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**இழப்பீடுகள்-முன்னோக்கிச் செல்வதற்கான வாழ்வாதார உதவி வழிகள்**

அர்த்தமுள்ள நினைவுகூரலின் அடுத்த படியாக, அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் "சாதாரண" வாழ்க்கையை நடத்தும் திறனை மீண்டும் பெறுதல் என்பது இழப்பீடுகளுடன் தொடங்குகிறது. "துக்கத்தின் உடனடி நிலைகள் தணிந்த பிறகு, மக்களின் வாழ்க்கை மாறுகிறது. பின்னர் அதற்கு சட்ட ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆதரவு இருக்க வேண்டும்" என உளச்சமூகப் பயிற்சியாளர் ஒருவர் நம்புகிறார்.

நேர்காணல் செய்தவர்களின் கூற்றுப்படி, பெண்கள் சந்திக்கும் பொதுவான பிரச்சினையாக மீண்டும் வேலைக்குச் செல்வதற்கான தகுதிக்கான உடல்சார் தகுதி இன்மை என்பது இருந்தது. தாம் தொடர்பு கொண்ட ஒரு பெண்ணின் நிலைமையை விளக்கும் உளச்சமூக பயிற்சியாளர் ஒருவர், "ஆரம்பத்தில் (அவள்) எந்த ஆவணத் தகுதியும் இல்லாததால் வேலை தேடுவதில் ஓரளவு சிரமப்பட்டார். ஆவணத்தில் தங்கள் திறமை இல்லாததால், பல பெண்களுக்கு இப்படித் தான் இருந்தது" எனக் குறிப்பிட்டார்.

பெண்கள் இழப்பீடுகளைப் பெறுவது பற்றிய ஒரு ஆபத்தான அம்சமும் அதே உளச்சமூக பயிற்சியாளரால் முன்னிலைப்படுத்தப்பட்டது. "சில நேரங்களில் இந்தப் பணம் ஒரு பிரச்சினையாக இருக்கலாம், ஏனெனில் இந்தப் பெண்களுடன் ஆண்கள் நெருங்கி பழகுகிறார்கள் மற்றும் பணத்திற்காக அவர்களை திருமணம் செய்ய முயற்சிக்கிறார்கள். நீங்கள் மூன்று அல்லது நான்கு குடும்ப உறுப்பினர்களை இழந்தால், தப்பிப்பிழைத்த பெண்களுக்கு சுமார் 40 இலட்சம் ரூபாய் கிடைக்கும். இந்தப்பணம் இந்தப் பெண்களிடம் உண்மையான அக்கறை இல்லாத மற்ற ஆண்களை ஈர்த்தது" என அவர் கூறினார். நேர்காணல் செய்பவர் சுட்டிக்காட்டியபடி, கணவர் வழி குடும்பத்தினரிடமிருந்து அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சிரமத்திற்கு மேலதிகமானதாக இது இருக்கின்றது. அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் இழந்த சோகத்துடன், குடும்ப சொத்தை சட்டப்பூர்வமாக பெண்கள் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிகழ்வுகளில், அவர்களுக்கு இடையேயான முந்தைய தகராறுகளின் காரணமாக அவர்களின் பாதிப்புகளை கணவர் வழி குடும்பத்தினர் பயன்படுத்திக்கொள்ளும் பல சூழ்நிலைகள் உள்ளன. இந்த அளவிற்கு, நேர்காணலுக்கு வந்தவர்களால் தொடர்ச்சியான உள மற்றும் உளச்சமூக ஆதரவும், பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களுக்குத் தேவைப்படும் மற்றும் எதிர்பார்க்கப்படும் இழப்பீட்டின் இன்றியமையாத வடிவமாக எடுத்துக் காட்டப்பட்டது.

பாதிக்கப்பட்டுத்தப்பிப்பிழைத்தவர்களுடனானதமது உரையாடல்களின் அடிப்படையில் ஒரு உண்மை குறித்து அனைத்து நேர்காணல் செய்தவர்களும் இணக்கம் கண்டனர். "எந்த நிறுவனம் உதவி செய்ய வேண்டும் என தப்பிப் பிழைத்தவர்களிடம் நீங்கள் கேட்டால், "அரசாங்கம்" என்பதே அவர்களது பதிலாக இருக்கும். எந்த நிறுவனம் உதவி செய்கின்றது என கேட்டால் "தேவாலயம் மட்டுமே" என்பது அவர்களது பதிலாக இருக்கும்" என பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களுக்கு உதவி செய்வதற்கான சிவில் சமூக நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவரின் கருத்தில் அது மேலும் விளக்கப்பட்டது.

**எழுதியவர் - கமினி இரத்நாயக்க,**
**பயிலுனர், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்**

### கோப், கோபா நிதிக்குழுக்களின்

# நெருக்கடிகளை சமாளிக்க ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தாரா?

## ஆளுந்தரப்பிற்குள்ளேயே கேள்வி

(ஆர்.யசி)

அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) ஆகியவற்றின் அண்மைக் கால செயற்பாடுகள் அரசாங்கத்திற்குள் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க பாராளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளதாக அரச தரப்பின் நம்பத்தகுந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆளுந்தரப்புக்குள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்ததுடன், முக்கியமான சில விவகாரங்களில் அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு(கோபா) மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) ஆகியன தலையிடுவது குறித்தும் மறைமுக எதிர்ப்பொன்று காணப்பட்டது.

குறிப்பாக சீனி,உரம் ஊழல் குற்றச்சாட்டு குறித்து ஒரு சில அதிகாரிகளையும், மத்திய வங்கி அதிகாரிகளையும் தொடர்ச்சியாக அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்படுவது தொடர்பிலும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா மீதான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

இலங்கை முதலீட்டு சபையுடன் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலைமைகளுக்கு மத்தியில் முதலீட்டு சபையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) முன்னிலையில் அழைத்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் அது அரசாங்கத்திற்குள் பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் (கோப் குழு) தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் மீதும் அரசாங்கம் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், அரச கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கை கடந்த பாராளுமன்ற அமர்வுகளின் போது சமர்பிக்கப்பட்டிருந்த நிலையில், அரசாங்கத்தின் வரிக்கொள்கை மற்றும் தீர்மானங்கள் குறித்து கோபா குழு அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்த நிலையில், அதன் தலைவர் கலாநிதி திஸ்ஸ விதாரணவிற்கும் மறைமுக நெருக்கடிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. ஆகவே தற்போது பாராளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளதற்கான காரணிகள் குறித்தும் பாராளுமன்ற குழுக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன் தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர் என பாராளுமன்ற வட்டாரங்களில் தெரியவருகின்றது.

அதேபோல் அடுத்த ஆண்டின் முதல் கடன் தவணைக்கான நிதியை அரசாங்கம் ஜனவரியில் செலுத்தவுள்ள நிலையில் அதனை செலுத்திவிட்டு அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெளிப்படுத்தவும், ஜனாதிபதியின் இரண்டு ஆண்டுகால செயற்பாடுகள் குறித்து பொதுவான விமர்சனம் ஒன்று முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அடுத்த ஆண்டின் புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்துவைக்கும் வேளையில் அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டங்களை தனது கொள்கை விளக்க உரையில் முன்வைத்து எதிர்க்கட்சிகளின் நெருக்கடிகளை சமாளிக்க எடுக்கும் முயற்சியாக இது அமைந்திருக்கலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 27 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று திங்கட்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 27 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14 641 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 14 ஆண்களும் 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 13 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். மேலும் நேற்று மாலை வரை 552 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

# தனது ஐந்து பிள்ளைகளையும் தவிக்கவிட்டு காதலனுடன் சென்ற தாய்க்கு விளக்கமறியல்

## வாரியபொல நீதிமன்றம் உத்தரவு; காதலனும் மறியலில்

( எம்.எப்.எம்.பஸீர்)

தனது ஐந்து பிள்ளைகளை, சிறு காட்டுப்பகுதியுடன் கூடிய தென்னந்தோப்பில் தவிக்கவிட்டு, கள்ளக் காதலனுடன் சென்றதாக கூறப்படும் தாயையும், அவரது காதலனையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க வாரியபொல நீதிவான் நீதிமன்றம் நேற்று ( 13) உத்தரவிட்டது.

வாரியபொல பதில் நீதிவான் சுனில் அபேவர்தன முன்னிலையில், குறித்த தாயும் அவரது கள்ளக் காதலனும் வாரியபொல பொலிஸாரினால் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

வாரியபொல அம்பகடவர பகுதியின் தென்னந்தோப்பொன்றில் பாதுகாப்பு வீடொன்றில் வசித்த 30 வயதான 5 பிள்ளைகளின் தாய், 36 வயதான அவரது கள்ளக் காதலன் ஆகியோரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரான தாய், 2 முதல் 12 வயதுகளை உடைய 5 பிள்ளைகளை உடையவர் எனவும், அவர் தனது சட்ட ரீதியிலான கணவர் மற்றும் பிள்ளைகளுடன் வாரியபொல அம்பகடவர தென்னந்தோப்பில் அமைந்துள்ள பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள வீட்டில் வசித்து வந்த நிலையிலேயே, அங்கு 5 பிள்ளைகளையும் தவிக்கவிட்ட 2ஆம் சந்தேக நபரான காதலனுடன் சென்றுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றுக்கு தெரிவித்தனர். பிள்ளைகளை கொடூரமாக நடத்தியமை தொடர்பில் சந்தேக நபர்களைக் கைது செய்ததாக பொலிஸார் நீதிமன்றுக்கு தெரிவித்தனர். இந்நிலையிலேயே அவ்விருவரையும் நாளை 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்தவாரம், தனது 5 பிள்ளைகளையும் சிறு காட்டுப் பகுதியுடன் கூடிய தென்னத்தோப்பில் தவிக்கவிட்டு கள்ளக் காதலனுடன் தாயொருவர் தலைமறைவான சம்பவம் வாரியபொல அம்பகடவர பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

காட்டில் ஓரிடத்திலிருந்து பிள்ளைகள் அழும் சத்தம் கேட்பதாக, பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் அந்த ஐந்து பிள்ளைகளையும் மீட்டிருந்தனர். அந்த பிள்ளைகள் ஐவரும் மீட்கப்படும் போது இரண்டு நாட்களாக எவ்விதமான உணவுமின்றி இருந்துள்ளனர். அந்த பிள்ளைகளில் சிறியவருக்கு 2 வயதெனவும் பெரிய பிள்ளைக்கு 12 வயதெனவும் பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து பொலிஸாரின் பொறுப்பின் கீழ் எடுக்கப்பட்ட பிள்ளைகள், உரிய சிறுவர் இல்லமொன்றுக்கு அனுப்பிவைக்கப்படும் வரையிலும் அப்பிள்ளைகளின் பெரிய தாயாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டனர். இந்நிலையிலேயே அது குறித்த விசாரணைகளில், அப்பிள்ளைகளின் தாயும், கள்ளக் காதலனும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூக்கள் பூக்காத பூந்தோட்டம் நூல் வெளியிட்டு விழா

இலங்கை தமிழ் கலைஞர் சங்கமும் சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜும் இணைந்து நடத்தும் கலைமாமணி பொன். பத்மநாதன் எழுதிய "பூக்கள் பூக்காத பூந்தோட்டம்" சிறுகதை தொகுப்பு நூல் வெளியிட்டு விழா 18ஆம் திகதி மாலை 04.00 மணிக்கு கொழும்பு, 13 கொட்டாஞ்சேனை வீதி, இல,60,நீவ் வைஷ்ணவி விஹார் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலும் தேசபந்து லயன் ஆர். அசோக்குமாரின் முன்னிலையிலும் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்பு ரையை கலாபூஷணம் கே. செல்வராஜும் அறிமுகவுரையை கலைஞர் ராதா மேத்தாவும் நயவுரையை மூத்த கலைஞர் கலாபூஷணம் கலைச்செல்வனும் ஏற்புரையை நூலாசிரியர் பொன். பத்மநாதனும் தொகுப்புரையை அஜித்குமாரும் நன்றியுரையை கே. ஈஸ்வர லிங்கமும் வழங்கவுள்ளனர். நூலின் முதல்பிரதியை அஸீஸ் மன்றத்தின் தலைவர் அஷ்ரப் அஸீஸ் பெற்றுக்கொள்வார்.

# மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அரசுடன் இணைந்தே பயணிக்கவேண்டும்

## புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம்

(புத்தளம் மேலதிக நிருபர்)

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமானால், அரசுடன் இணைந்துதான் பயணிக்க வேண்டும். எனது கட்சியை விட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி, எனது மாவட்ட மக்களின் அங்கீகாரத்தோடு அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறேன். எதிர்க்கட்சியில் பெயரளவில் உறுப்பினராக இருப்பதை விட, அரசோடு இணைந்து மக்களுக்கு பணியாற்றுவது ஆத்ம திருப்தியைக் கொடுக்கிறது என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட இறுதி வாக்கெடுப்பின் போது அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பாராளுமன்ற உறுப்பினரின் புத்தளம் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு இவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் புத்தளத்தில் வாழும் சிறுபான்மை மக்கள் தமக்கான ஒரு பாராளுமன்ற பிரதிநிதியைப் பெற்றிருக்கிறார்கள். இவ்வாறு 30 வருடங்களுக்கு பின்னர் என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பி அழகு பார்க்கவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்காக மக்கள் தெரிவு செய்யவில்லை. வீடு, காணி, தொழில்வாய்ப்புக்கள் என்பனவற்றோடு வீதி, மின்சாரம், கல்வி என பின்னடைந்து காணப்படுகின்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் மக்கள் என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். எனவே, எனது மாவட்ட மக்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது எனது கடமையாகும். மக்களின் எதிர்பார்ப்புக்களை புதைத்து விட்டு கட்சியிலுள்ளவர்களை திருப்திப்படுத்த எனது மனச்சாட்சி இடம்கொடுக்கவில்லை.

எனது கட்சியை விட மக்களின் அபிலாஷைகளே எனக்கு முக்கியம் எனக் கருதி , எனது மாவட்ட மக்களின் அங்கீகாரத்தோடு அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறேன். அரசுக்கு ஆதரவு உறுப்பினராக செயற்பட்டு வரும் நாள் முதல் புத்தளம் மாவட்டத்தில் இந்த வருடம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன்.

அடுத்த வருடமும் இன்னும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டுள்ளேன். பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களோடும் பேசியிருக்கிறேன். ஆகவே, அடுத்த வருடத்திற்கான வரவு–செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களித்தால் எனது மாவட்ட மக்களுக்கு என்னால் எந்த அபிவிருத்தி பணிகளையும் செய்ய முடியாது.

# பாராளுமன்ற ஒத்திவைப்பு சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது

## உண்மைக்காரணத்தை உடன் தெளிவுபடுத்தவேண்டியது அவசியம் என்கிறது எதிர்க்கட்சி

(நா.தனுஜா)

பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதிவரை பிற்போடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களின் செயற்பாடுகள் பாதிப்படையும். அதுமாத்திரமன்றி கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையம் தொடர்பான இரகசிய ஒப்பந்தத்திற்கு எதிரான கருத்துக்கள் வெளியாவதைத் தடுப்பதற்காக ஜனாதிபதி தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற செயற்பாடுகளை மட்டுப்படுத்தியிருக்கின்றாரா? என்ற வலுவான சந்தேகம் எழுகின்றது. ஆகவே பாராளுமன்ற அமர்வுகள் பிற்போடப்பட்டமைக்கான உண்மைக்காரணம் குறித்து ஜனாதிபதி நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பாராளுமன்ற அமர்வுகளைப் பிற்போடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது. அரசியலமைப்பின் பிரகாரம் அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ள போதிலும், விசேட சந்தர்ப்பங்களின்போது மாத்திரமே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக பாராளுமன்ற அமர்வுகளைப் பிற்போடுவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவாறான காரணங்கள் எதனையும் கூறாமல், ஜனாதிபதியினால் சடுதியாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையானது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்டம் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில் பாராளுமன்ற அமர்வுகளை ஜனவரி மாதம் 18 ஆம் திகதிவரை பிற்போட்டு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான காரணம் என்ன?

இவ்வாறு பிற்போடப்படுவதன் விளைவாக பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள், கோப் குழு உள்ளடங்கலாக அனைத்தினது நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச்செல்வதில் காலதாமதம் ஏற்படும். ஆகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களினால் அரசாங்கத்திற்கு ஏதேனும் அழுத்தங்கள் ஏற்பட்டதா? அல்லது அவற்றின் செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு விரோதமானவையாக அமைந்ததா? என்பது குறித்து எமக்குத் தெரியாது. இருப்பினும் கடந்த காலங்களில் அரச நிதி பற்றிய குழு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவையாக அமைந்தன.

குறிப்பாக அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்மோசடிகள் குறித்துத் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் அதற்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தற்போது பாராளுமன்ற அமர்வு பிற்போடப்பட்டுள்ள நிலையில் அவையனைத்தும் வலுவிழப்பதுடன் மீண்டும் முதலிலிருந்து அவற்றை ஆரம்பிக்கவேண்டிய நிலையேற்படும். எனவே பாராளுமன்ற அமர்வுகள் பிற்போடப்பட்டமைக்கான காரணம் குறித்து ஜனாதிபதி நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

அடுத்ததாக தற்போது நாடு மிகப்பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. நாட்டின் வெளிநாட்டு இருப்பு 1.4 பில்லியன் டொலர்களை விடவும் குறைவடைந்திருப்பதுடன் அது எமக்கு இருவாரங்களுக்குக்கூடப் போதுமானதல்ல. மறுபுறம் பொருட்களின் விலைகள் பெருமளவால் அதிகரித்திருப்பதன் விளைவாக மக்களின் வாழ்க்கைச்செலவு சடுதியாக உயர்வடைந்து அவர்களைப் பாரிய நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது. இப்போது சர்வதேச நாணய நிதியத்தைநாடி, நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.


அடுத்ததாக நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச்சம்பவங்கள் பதிவாகி, மக்கள் அச்சத்திற்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் அரசாங்கம் இன்னமும் அதற்குரிய தீர்வை வழங்கவில்லை. இதற்கு மத்தியில் இப்போது திரவ உரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கொள்கலன்களும் வெடிக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனால் ஜனாதிபதி இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதை விடுத்து, தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற செயற்பாடுகளை மட்டுப்படுத்த முனைவது வலுவான சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கை குறித்த தகவல்கள் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் வெளியாகியிருந்ததுடன் அதுபற்றி பல்வேறு வாத, பிரதிவாதங்களும் இடம்பெற்றன. இது அரசாங்கத்திற்குப் பாரிய சவாலாக மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில், இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்ப்பலை உருவாவதைத் தடுப்பதற்காகவா இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கின்றது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இவ்வாறான ஏகாதிபத்தியவாத நிர்வாகத்திற்கு எதிராக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிட்டார்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு ★ 14 ★ 12 ★ 1939

இறப்பு ★ 25 ★ 11 ★ 2020



அமரர் திரு.

சிதம்பரம் செல்லையாபிள்ளை

(Y.S.G.P.Pandian &Co, Colombo -12)

திதி: 14.12.2021

என்றும் நீங்கா நினைவுகளுடன்

மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமகள்மார், பேரன்மார், பேத்தி.

No.85/2, Davidson Road, Colombo - 04.



நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 08 1946

உதிர்வு 14 12 2017



அமரர் திரு. சி.பூசைமணி

சியாமா அரிசி ஆலை – வவுனியா (முன்னாள் உரிமையாளர்)

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் குடும்ப தலைவரே!
ஆண்டு நான்கை கடந்தாலும் ஆறவில்லை தெய்வமே!
உங்கள் பிரிவுத்துயரம், உங்கள் நினைவலைகள்
இன்னும் எம் மனதில் பசுமையாகவுள்ளது.
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டிய உங்கள் நினைவுகளுடன்
தங்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

தகவல்: பூ.தியாகலிங்கம் (மகன்), கொழும்பு-15.
பூ.மகேஸ்வரன் (மகன்) அவுஸ்திரேலியா.

Tel: 0772259977, 0777615757, 0770533699


(தொடர்ச்சி)

## தனது...

தொடர்புகள் அனைத்தும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடனேயே பேணப்பட்டுவருகின்றன. ஆகவே அதனைப் பயன்படுத்தி இலங்கையில் இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான அழுத்தங்களைப் பல்வேறு வழிமுறைகளிலும் பிரயோகிப்பதற்கு அமெரிக்கா முன்வரவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப்பிராந்தியப் பணிப்பாளர் ஜோன் சிப்டன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பயங்கரவாதத்தடைச்சட்டம் உரியவாறு திருத்தியமைக்கப்படுவதற்கோ அல்லது முழுமையாக இல்லாதொழிக்கப்படுவதற்கோ அவசியமான அழுத்தங்களை அமெரிக்கா தொடர்ந்து வழங்கவேண்டும். அதுமாத்திரமன்றி அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நீக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல்' தொடர்பில் தகவல்களைத் திரட்டுவதற்கான விசாரணையொன்று அமெரிக்க காங்கிரஸின் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கடந்த வாரம் நடத்தப்பட்டது.

அவ்விசாரணைகள் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களான ஜேம்ஸ் பி.மெக்கோவேர்ன், கிறிஸ்டோபர் எச்.ஸ்மித் மற்றும் டெபோரா ரோஸ் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டது. அதில் முன்னிலையாகி இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை தொடர்பில் சாட்சியமளிக்கையிலேயேஜோன் சிப்டன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அவதானம் செலுத்துவதில் அடைந்திருக்கக்கூடிய தோல்வி மற்றும் எதிர்காலத்தில் இருநாடுகளினதும் இராணுவத்தினருக்கு இடையிலான தொடர்புகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கள் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் ஜோபைடன் அரசாங்கத்துடனும் இலங்கை அரசாங்கத்துடனும் தெளிவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கை தற்போது முகங்கொடுத்துள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடி, இலங்கை விவகாரங்களில் அதிகரித்துவரும் சீனாவின் தலையீடு என்பன ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் போன்ற ஜனநாயக நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 03 . 1961



மறைவு
11 . 12 . 2021

## திருமதி பற்குணநாதன் தெய்வகுமாரி(குமாரி)

21 செம்மணி வீதி நாயன்மார்க்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பற்குணநாதன் தெய்வகுமாரி 11.12.2021 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மனோன் மணி அவர்களின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை பற்குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தா (யாழ்ப்பாணம்) சுகிர்தன் (சுகிர்–காணாமலாக் கப்பட்டவர்–2007), நிரோஜினி, நந்தினி (லண்டன்), கோபிகிருஷ்ணா (சுவிஸ்லாந்து), மதன்குமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேந்திரா (ஸ்ரீவிக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் – யுனிலிவர் டிஸ்ரிவூட்டோர்ஸ் விற்பனைப் பிரதிநிதி–சாவகச்சேரி), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் அமரர் தெய்வேந்திரன் (இத்தாலி), அமரர் தர்மினி (யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (வவுனியா), சுமதினி (யாழ்ப்பாணம்), யோகேந்திரன் (வவுனியா) ஆகியோ ரின் அன்பு சகோதரியும் அமரர் விஸ்வலிங்கம், சபாரட்ணம் (அனலைதீவு), சின்னத்துரை, தில்லைச்சிவம் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் அழகேஸ்வரி, சாராதாம்பிகை, ரவீந்திரநாதன், கணேசநாதன், பாபு (அத்தியடி பத்மா (பிரான்ஸ்),புவனேஸ்வரி(இத்தாலி), இராசலட்சுமி (வவுனியா),ஹரிகரன் (இந்தியா),தயாளரூபா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமரர் கனகசிங்கம், புண்ணியசிங்கம், லோகசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் சிரோன்மணி (கனடா), தவமணி (மைனா–கனடா), அமரர் நவமணி (குஞ்சுக்கிளி), அமரர் ருக்மணி, ஜெயமணி ஆகியோரின் பெறாமகளும் வளர்மதி, சிந்துமதி, ஜெயசங்க, வஜனிகா, கோகுலன் ஆகியோரின் பெரிய–தாயாரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இந்திராணி (வவுனியா தெற்கிலுப்பைக்குளம்) சண்முகரத்தினம், கமலாம்பிகை(தங்கோடை காரைநகர்) ஆகியோரின் சம்பந்தியும் கெவின், கனியமுதன், சங்கீதன், சரனுகா, கலைக் குமரன், லேக்கா, விதுலன், தனுசிகன், சுபதா, காவியா, துளசி ஆகியோரின் அன்பு மாமியும் டேனுகா (லண்டன்) தக்ஷிகா(லண்டன்) பானுஜா (யாழ்ப்பாணம்) தனுசிகன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2021 வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**

**கோபிகிருஷ்ணா (சுவிஸ்லாந்து)0041795587477**
**நிரோஜினி (நந்தினி லண்டன்) 00447951729064**
**மதன்குமார் (அவுஸ்திரேலியா ) 0061409899481**
**பாலேந்திரா (பாலா -மருமகன்) 0762999527**
**சாந்தா (மகள்) 0778737087, 0772399527**
**பற்குணநாதன் (கணவர்) 0775187572**
**பாபு மைத்துனர் (அத்தியடி) 0776592066**

**தகவல்**
**குடும்பத்தினர்**

**21, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்.**

## பிரபஞ்ச...

(தொடர்ச்சி)

போட்டியாளர்களைத் தோற்கடித்து அழகுராணியாக முடிசூட்டிக் கொண்டார்.

இதற்கு முன்னர் பிரபஞ்ச அழகுராணியாக தெரிவுசெய்யப்பட்டிருந்த மெக்ஸிக்கோ அழகுராணி அன்ட்றியா மெஸா பொலிவூட் நடிகையும் மொடல் அழகியுமான ஹர்னாஸுக்கு (21 வயது) அழகுராணிக்கான கிரீடத்தை அணிவித்தார்.

மேற்படி போட்டியானது கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் உலகளாவிய ரீதியில் அச்சம் நிலவுகின்ற நிலையில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பமாகி நேற்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நிறைவுபெற்ற இந்த அழகுராணிப் போட்டியில் பங்கேற்றவர்கள் தேசிய ஆடை அணிகள், நீச்சல் உடை ஆகியவற்றை அணிந்து தோன்றியதுடன் நேர்முகங் காணலில் ஆஜராகி கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

இதற்கு முன்னர் இந்தியாவைச் சேர்ந்த அழகுராணிகளான சுஸ்மிதா சென் மற்றும் லாரா தத்தா ஆகியோர் பிரபஞ்ச அழகுராணிகளாக முடிசூட்டிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் சண்டிகாரை பிறப்பிடமாகக் கொண்ட ஹர்னாஸ் பொது நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவராவார். இந்த அழகுராணிப் போட்டியில் இரண்டாம் இடத்தை பராகுவே அழகுராணியான நடியா பெரேராவும் (22 வயது) மூன்றாமிடத்தை தென் ஆபிரிக்க அழகுராணி லலேலா மஸ்வேனும் (24 வயது) பெற்றுள்ளனர்.

## வத்தளையில்...

(தொடர்ச்சி)

வத்தளை எண்டேரமுல்ல பகுதியைச் சேர்ந்த, மஹர பகுதியின் பிரபல பாடசாலை ஒன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் கே.கே.ருவிந்த புன்சர (15) மற்றும் எம். சஞ்சித சந்தகெலும் (15) ஆகிய இரு மாணவர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.வத்தளை ப்ரீத்திபுர கடற்கரைக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) மாலை பாடசாலை மாணவர்கள் நான்கு பேர் சென்றுள்ளனர். அவர்கள் கடலில் நீராடிக் கொண்டிருந்த வேளையில், அவர்களில் இருவர் கடலலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இதனையடுத்து அவர்கள் காணாமல்போயுள்ளனர்.காணாமல்போன மாணவர்களை தேடும் நடவடிக்கையில் கடற்படை சுழியோடிகள் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டிருந்த நிலையில் இரு மாணவர்களும் சடலமாக நேற்று காலை மீட்கப்பட்டுள்ளனர். நீராட பொருத்தமற்ற பகுதியில் இவர்கள் நீராடியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.மீட்கப்பட்ட இரு சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சீனாவின்...

(தொடர்ச்சி)

உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளதோடு கடற்றொழிலாளர்களுக்கான ஒருதொகுதி உபகரணங்களை வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் யாழில் 800 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளதோடு 2 ஆயிரம் மீனவர்களுக்கு நிவாரணப் பொதி வழங்கப்படவுள்ளது. மன்னார் மாவட்ட மீனவர்களில் 150 பேருக்கு மீன்பிடி வலைகளும் 700 பேருக்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் திவாரண மீன்பிடி வலைகள் தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்பதோடு நிவாரணப் பொதிகள் 5 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூருக்கு...

(தொடர்ச்சி)

சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான எஸ்.கியூ.469 என்ற விமானத்தின் ஊடாகவே ஜனாதிபதி சிங்கப்பூர் சென்றுள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார்.இந்நிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தை 18 ஆம் திகதி வரை ஒத்தி வைப்பதாக ஜனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதோடு அவரது சிங்கப்பூர் விஜயமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மு.கா.வின்....

(தொடர்ச்சி)

ஆதரவாக வாக்களித்தமைக்கு விளக்கம் கோரி அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்துக்கு வாக்களிப்பது தொடர்பாக தீர்மானிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற குழு கடந்த மாதம் 20ஆம் திகதி கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் கூடியது. இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் 5 பாராளுமன்ற உறுப்பினர்களில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக் ஆகிய இருவர் மாத்திரமே அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஏனைய 3உறுப்பினர்களான எச்.எம். எம். ஹரீஸ், பைசல் காசிம் மற்றும் நசீர் அஹமட் ஆகியோர் சுகவீனம் காரணமாக வரவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த மாதம் 22ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில் அதற்கு ஆதரவாக வாக்களிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டிருந்தது. என்றாலும் 22ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெற்ற போது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதற்கு எதிராக வாக்களித்திருந்ததுடன் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் வாக்களிப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை. என்றாலும் ஏனைய 3 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர். கட்சியின் தீர்மானத்துக்கு மாற்றமாக செயற்பட்டமைக்கு இரண்டு வாரங்களில் விளக்கம் கோரி, பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், பைசல் காசிம் மற்றும் நசீர் அஹமட் ஆகியோரை கட்சியில் இருந்து இடை நிறுத்துவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றபோது ஏனைய 3உறுப்பினர்களுடன் இணைந்து எம்.எஸ்.தௌபீக் ஆதரவாக வாக்களித்திருந்தார். அதன் காரணமாகவே இதுதொடர்பாக இரண்டு வாரங்களில் விளக்கம் கோரி, அவரை கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் கடிதம் அனுப்பியுள்ளார்.

## வைரஸ்...

(தொடர்ச்சி)

சுகாதார அமைச்சின் கொவிட் வைரஸ் பரவல் செயற்பாடுகளின் பிரதான தொடர்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

கொவிட் புதிய பிறழ்வுகள் குறித்த அச்சுறுத்தல் நிலைமைகளில் அடுத்துவரும் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போதான அரசாங்கத்தின் தீர்மானங்கள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் இது குறித்து கூறுகையில்,

கொவிட் 19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. உலக நாடுகள் இன்றும் கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டே உள்ளன. இலங்கையிலும் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திவிட்டதாகக் கூற முடியாது. ஆனால் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்வதன் மூலமாக மக்களின் உயிர் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தியுள்ளோம்.

இப்போதும் இலங்கையில் பெரும்பாலான மக்கள் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே சகலரும் மூன்றாம் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாம் தடுப்பூசி ஏற்றுவதன் மூலமாக பரவலைக் கட்டுப்படுத்த முடியும். உலக நாடுகள் இப்போது மூன்றாம் தடுப்பூசியை கட்டாயமாக்கியுள்ளன. மூன்றாம் தடுப்பூசியே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இருக்கும் ஒரே வழிமுறையாகும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆகவே இலங்கைக்கும் மூன்றாம் தடுப்பூசி அவசியமாகும். இப்போது இலங்கையில் பண்டிகைக்காலமாகும்.இதன்போது மக்கள் தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்க்க முடியாது. இவ்வாறான நிலையில் மக்கள் தமது கடமைகளை உணர்ந்து செயற்படுவதுடன் தடுப்பூசிகளை விரைவாக ஏற்றிக்கொண்டால் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். இலங்கையில் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு இல்லை. வயது கட்டமைப்புக்கு ஏற்ப தனித்தனியாக தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அது மக்களின் கடமையாகும். மக்கள் குழப்பமடையாது தமது கடமையை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றார்.

## எரிவாயு...

(தொடர்ச்சி)

குறித்த பெண்ணின் மரணத்துக்கு நீதி கோரி அவரது கணவன் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கண்டி, குண்டசாலை, நத்தரம்பொத்த பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் சமையல் எரிவாயு சிலிண்டரை அண்மித்த வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 51 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த பெண்ணுடைய கணவன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது , ' லிட்ரோ நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்டரையே உபயோகித்தோம். நீண்ட காலமாக நாம் சமையல் எரிவாயு அடுப்பை உபயோகிக்கின்றோம். இது போன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெறவில்லை. ஆனால் தற்போது திடீரென மக்களை ஏமாற்றி , சமையல் எரிவாயுவின் இரசாயன பதார்த்த உள்ளடக்கத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சமையல் எரிவாயு நிறுவனங்களின் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக என்னுடைய மனைவி உயிரிழந்துள்ளார். எரிவாயு கசிவினால் ஏற்பட்ட தீக்காயமே உடல் அவயவங்களை பாதித்து உயிரிழப்புக்கு ஏதுவாய் அமைந்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது தர நிர்ணய நிறுவனம் தூக்கத்தில் உள்ளது. அவர்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்துவதில்லை.

மக்களின் உயிருடன் விளையாடிக் கொண்டு , இவ்வாறான நிறுவனங்களுக்கு தேவையான வகையில் அவை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே நான் லிட்ரோ நிறுவனத்துக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக வழக்குத் தொடர தயாராகவுள்ளேன். நான் எனது மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் மாத்திரம் வழக்கு தொடர தீர்மானிக்கவில்லை. இனியொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே நீதிமன்றத்தை நாடவுள்ளேன். எனது மனைவியின் மரணத்துக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

## கொவிட்...

(தொடர்ச்சி)

சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதார பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

இலங்கையில் கொவிட் வைரஸ் இனங்காணப்பட்ட நாள் முதல் இதுவரையில் 10 500 கர்ப்பிணித்தாய்மார் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 60 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் தொற்றுக்குள்ளான பெரும்பாலான கர்ப்பிணித்தாய்மார் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 95 சதவீதமான கர்ப்பிணித்தாய்மார் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் 30 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 20 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்குவதற்கான சுற்றுநிருபம் கிடைக்கப்பெற்ற பின்னர் அவர்களும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம்.எவ்வாறிருப்பினும் மூன்றாம் கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டாலும் கொவிட் தொற்றிலிருந்து 100 வீதம் பாதுகாப்பு பெற முடியாது என சமூக இடைவெளியைப் பேணல், சன நெரிசல் அதிகம் காணப்படும் இடங்களுக்கு செல்லாதிருத்தல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது அத்தியாவசியமானதாகும்.வெளியிடங்களுக்குச் செல்லும் போது அநாவசியமாக சிறுவர்களை அழைத்துச் செல்வதை பெற்றோர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். காரணம் 18 வயதுக்கு குறைவான 89 சிறுவர்கள் கொவிட் தொற்றின் காரணமாக உயிரிழந்துள்ளனர். அத்தோடு பாடசாலைகளிலும் கொவிட் பரவல் கணிசமானவு அதிகரித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகம் இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என்றார்.

## ஜனாதிபதியின்...

(தொடர்ச்சி)

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ அரசியலமைப்பில் தனக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய பாராளுமன்ற அமர்வை நிறுத்தி வெளியிட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்துக்கமைய பாராளுமன்ற அமர்வை நிறுத்தி புதிய அமர்வை கூட்டமுடியும். அதனடிப்படையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஜனாதிபதியால் நிறைவுறுத்தப்பட்டிருக்கின்றது. புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி கூட்டப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வு இவ்வாறு ஜனாதிபதியால் நிறைவுறுத்தினால், பாராளுமன்றத்தின் அனைத்து செயற்குழுக்களும் செயலிழக்கப்பட்டுவிடும். பாராளுமன்றம் கூடிய பின்னர் மீண்டும் அந்த குழுக்களுக்கு புதிதாக தலைவர் உட்பட உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும்.

கடந்த காலங்களிலும் நாட்டில் இருந்த ஜனாதிபதிகள் இவ்வாறு பாராளுமன்ற அமர்வுகளை நிறுத்தி இருக்கின்றனர். இவ்வாறு நிறுத்தப்படும்போது அதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கும். அதன் பிரகாரம் கோட்டாபய ராஜபக் ஷவும் தற்போது பாராளுமன்ற அமர்வை நிறைவு செய்திருக்கின்றார். திடீரென இந்த முடிவுக்கு வருவதற்கான காரணம் என்ன என்பது இறைவனுக்குத்தான் தெரியும். என்றாலும் இதற்கு பின்னால் ஏதாவது முக்கிய காரணம் இருக்கலாம். எவ்வாறு இருந்தபோதிலும் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதியால் நிறுத்தப்படுவதன் மூலம் விசேடமாக கோப் மற்றும் கோபா குழுக்களின் அனைத்து நடவடிக்கைகளும் செயலிழக்கப்படுவதுடன் அதன் விசாரணைகளும் செயலிழக்கப்படும்.

மேலும் நாங்கள் இந்த அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி. என்றாலும் அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கும்போது எங்களுடன் கலந்துரையாடுவதில்லை. அமைச்சரவையில் நாங்கள் இல்லை. அதனால் அரசாங்கம் தவறான தீர்மானங்களை எடுக்கும்போது அதனை சுட்டிக்காட்டவும் எமக்கு முடியாமல் இருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சாதாரண மக்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்றார்.

## புகையிரத...

(தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவு முதல் 24 மணிநேரம் மருதானை புகையிரத தொலைத்தொடர்பு மையத்தின் சேவைகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளனர்.

மருதானை புகையிரத தொலைத்தொடர்பு மையத்தின் சேவைகளில் இருந்து விலகுவதன் காரணமாக பயணிகள் புகையிரத போக்குவரத்து சேவைகள் தாமதமாகலாம். முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இரண்டு வாரத்துக்குள் தீர்வின்றேல் எதிர்வரும் 26ஆம் திகதி அனைத்து புகையிரத பொறுப்பதிகாரிகளையும் ஒன்றிணைத்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புகையிரத திணைக்கள உயர்மட்ட அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளின் காரணமாக புகையிரத பயணம் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.பாதுகாப்பற்ற புகையிரத சமிக்ஞை தொடர்பில் எமது சங்கத்தினர் பலமுறை புகையிரத திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம்.இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காததன் காரணமாக கட்டம் கட்டமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

புகையிரத சேவையில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் புகையிரத திணைக்களத்தின் முன்னாள் பதில் பொது முகாமையாளரிடமும் தற்போதைய பொதுமுகாமையாளரிடமும் பல முறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதோடு காணப்படும் பிரச்சினைகளுக்கு மாற்று திட்டங்களையும் முன்வைத்துள்ளோம். இதுவரையில் சாதகமான தீர்மானங்கள் புகையிரத திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவில்லை.அக்கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நள்ளிரவு முதல் புகையிரத தொலைத்தொடர்பு மையத்தின் சேவைகளில் இருந்து 24 மணிநேரம் விலக தீர்மானித்துள்ளோம்.எமது பணிப்புறக்கணிப்பின் காரணமாக பயணிகள் புகையிரத போக்குவரத்து சேவையில் தாமதம் ஏற்படலாம். பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய நோக்கம் எமக்கு கிடையாது. தனிப்பட்ட நலன்களை கருத்திற் கொண்டு பணியில் இருந்து விலகவில்லை. பயணிகளின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இத்தீர்மானத்தை முன்னெடுத்துள்ளோம்.09 புகையிரத உப திணைக்களங்களுக்குமான உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பு பறிமாற்றல் இந்த சேவை மையத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.அவசர புகையிர தந்தி சேவை,புகையிரத இயந்திர கோளாறு,சமிக்ஞை பிறப்பாக்கல்,புகையிரத விபத்து,புகையிரத விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் பறிமாற்றல்,புகையிரத சேவையின் அவசர அறிவிப்பு ஆகிய சேவைகள் இனி தாமதமாகலாம். முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை இவ்விரு வாரத்துக்குள் பெற்றுக் கொடுக்காவிடின் அனைத்து புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளையும் புகையிரத சேவையின் ஏனைய தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 26ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றார்.

## பிரதான...

(தொடர்ச்சி)

அதிகாரசபையின் சட்ட ஆலோசனைக்குழு இது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெற்றுவருவதாக கூறப்படுகின்றது. நுகர்வோர் அதிகாரசபையின் நிலைப்பாட்டை அரசாங்கத்திடமும் அறிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இலங்கையில் விநியோகிக்கும் சமையல் எரிவாயுக்களின் கலப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அடுத்து கடந்த சில மாதங்களாக நாட்டில் பல்வேறு எரியாவு கசிவு மூலமாக வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சம்பவங்களுடன் தொடர்புபட்ட இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளதுடன் கடந்த பத்து நாட்களில் 150 வெடிப்புச் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ளன. இதனை அடுத்து நுகர்வோர் அதிகாரசபை குறித்த எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை கேள்விக்குறிக்குள்ளாக்கியுள்ள இந்த செயற்பாடுகள் குறித்து எரிவாயு விநியோக நிறுவனங்கள் கூடிய கவனம் எடுத்திருக்க வேண்டும் என்பதையும் தொடர்ச்சியாக மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் ஒரு சில தினங்களில் இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கும் எதிராக வழக்குத் தொடர தாம் தீர்மானித்துள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபையின் சட்டக்குழு தீர்மானித்துள்ளது. அது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவிடம் இது குறித்து வினவிய போது அவர் கூறுகையில், எரிவாயு கசிவு காரணமாக ஏற்படுகின்ற வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான நிலைமைகளை நாம் அவதானித்து வருகின்றோம். நுகர்வோர் அதிகார சபையின் அறிக்கையொன்று எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் குறித்த இரண்டு எரிவாயு நிறுவனங்களான லிட்ரோ மற்றும் ஷெல்காஸ் நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக கூறியுள்ளனர். ஏற்கனவே ஒரு வழக்கும் பதிவாகியுள்ள நிலையில் இது குறித்து நாம் அவதானம் செலுத்தி வருகின்றோம்.

அதேபோல் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ள நிலையில் இதனை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்க முடியாதுள்ளது. எனினும் அச்சுறுத்தல் நிலைமைகளை பூச்சியமாக்கும் விதத்தில் நுகர்வோருக்கான எரிவாயு சிலிண்டர்களை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கான சகல விதமான நடவடிக்கைகளையும் நாம் கையாள நினைக்கின்றோம். இவ்வாறான அச்சுறுத்தல் நிலைமைகளை தவிர்க்க என்ன செய்ய முடியுமோ அதற்கான ஆலோசனைகளை யார் முன்வைத்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு ஆரோக்கியமான விதத்தில் செயற்படத் தயாராகவே உள்ளோம் என்றார்.

## பாராளுமன்ற...

(தொடர்ச்சி)

எடுக்கப்பட்ட தீர்மானமாக இது இருக்கலாம் எனவும் கோப்,கோபா உள்ளிட்ட பிரதான குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகளை 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி கூட்டுவதாக இறுதியாக சபாநாயகர் தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி நள்ளிரவு ஜனாதிபதியினால் விடுக்கப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஒன்பதாம் பாராளுமன்றத்தின் முதலாம் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில்

"இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசியல் அமைப்பின் 70 ஆம் உறுப்புரிமையால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களில் பயனைக்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ ஆகிய நான், இப்பிரகடனத்தின் மூலம் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாளன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றது என்பதையும், பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரின் ஆரம்பமானது இரண்டாயிரத்து இருபத்தியிரண்டாம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி முற்பகல் 10 மணியாக நியமிக்கப்பட்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்ற கூட்ட மண்டபத்தில் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கப்படுகின்றது" எனவும் ஜனாதிபதியின் அறிவிப்பின் பெயரில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவினால் விடுக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மீண்டும் ஜனவரி 18 ஆம் திகதி, ஜனாதிபதியினால் புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் சபாநாயகர் தவிர்ந்து ஏனைய சகல பதவிகளும் பாராளுமன்ற விசேட குழுக்கள்,உயர் பதவிகளை அங்கீகரிப்பது தொடர்பான அரசியலமைப்பு பேரவை தவிர்ந்த ஏனைய சகல பாராளுமன்ற குழுக்களும் புதிதாக நியமிக்கப்படவுள்ளன.

குறிப்பாக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, அரசியல் அமைப்பு குழு, பொது அலுவல்கள் பற்றிய குழு, அமைச்சுசார் ஆலோசனைக் குழு, அரசாங்க நிதி பற்றிய குழு, அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு உள்ளடங்கலாக சகல குழுக்களும் நீக்கப்படும். ஆகவே பாராளுமன்றம் மீண்டும் கூடும் வேளையில் சகல தெரிவுக்குழுக்களையும் மீண்டும் புதிதாக நியமிக்க வேண்டும். அத்துடன் அரசாங்கம் இப்போது சபைப்படுத்தியுள்ள சட்டமூலங்களும் முழுமையாக இல்லாது போவதுடன் மீண்டும் புதிய பாராளுமன்ற அமர்வுகளில் அவற்றை முன்வைக்க வேண்டும்.

இந்நிலையில் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் குறித்து ஆளும்கட்சி முன்னாள் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கேசரிக்கு கூறுகையில் : பாராளுமன்ற சபை அமர்வுகளை ஒத்திவைக்க ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட தீர்மானம் அவசரமான எடுக்கப்பட்ட ஒன்றல்ல. வழமையாக நீண்டகால பாராளுமன்ற செயற்பாடுகளை அடுத்து மீள் கட்டமைப்பு செயற்பாடுகளை சகலரும் முன்னெடுப்பது வழமையாகும். அதற்கமைய ஜனாதிபதியினால் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் புதிய பாராளுமன்றம் கூடுகின்ற வேளையில் புதிதாக நியமனங்கள் மற்றும் குழுக்களின் நியமனங்கள் முன்னெடுக்கப்படும். இதனை சாதாரண விடயமாக கருத வேண்டும் என்றார்.

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இது குறித்து கூறுகையில் :

ஜனாதிபதியின் இந்த தீர்மானம் குறித்து தெளிவான விளக்கமொன்று எம்மத்தியில் இல்லை. ஆனால் இந்தத் தீர்மானத்துக்கு பின்னணி ஒன்று இருந்தாக வேண்டும். சில நெருக்கடி நிலைமைகளை கையாள இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது என்றார்.

பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்தமை குறித்து ஏனைய குழுக்களின் நிலைப்பாடுகளை வினவிய வேளையில் அவர்களும் ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து தெளிவில்லை எனவும் ஒரு சில நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும் என்பதையும் தெரிவித்தனர்.

பௌத்த தேசியவாதத்தை முன்னிலைப்படுத்திய

# அரசாங்கத்தின் செயற்பாடுகளில் தமிழ்–முஸ்லிம் சமூகங்களே இலக்கு

**அமெரிக்க காங்கிரஸின் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சாட்சியம்**

(நா.தனுஜா)

ஜனாதிபதியின் கொள்கையில் சிங்கள பௌத்த தேசியவாதமும் இராணுவமயமாக்கலும் இரு பிரதான கூறுகளாகக் காணப்படுவதுடன், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள பௌத்த தேசியவாதத்தை மையப்படுத்திய அரசியல் செயற்பாடுகள் ஏற்கனவே இன, மத ரீதியாக பல்வேறு வழிகளிலும் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்களை இலக்கு வைப்பவையாக அமைந்துள்ளன என்று அமெரிக்க காங்கிரஸின் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இவ்வாறானதொரு பின்னணியில் அமெரிக்கா இலங்கைக்கு 'நிபந்தனைகளற்ற' ஆதரவை வழங்கக்கூடாது என்று வலியுறுத்திய அவர், சர்வதேச நீதிப்பொறிமுறை, மக்னிற்ஸ்கி சட்டப்பயன்பாடு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 7031 (சி) சரத்தின் கீழான தடை போன்ற பல்வேறு வழிமுறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதற்கு அவசியமான ஒத்துழைப்பை அமெரிக்க வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

'இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல்' தொடர்பில் தகவல்களைத் திரட்டுவதற்கான விசாரணையொன்று அமெரிக்க காங்கிரஸின் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கடந்த வாரம் நடத்தப்பட்டது.

அவ்விசாரணைகள் டொம் லான்ரோஸ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களான ஜேம்ஸ் பி.மெக்கோவேர்ன், கிறிஸ்டோபர் எச்.ஸ்மித் மற்றும் டெபோரா ரோஸ் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டது. அதில் முன்னிலையாகி இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை தொடர்பில் சாட்சியமளிக்கையிலேயே அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் கடந்த 2015ஆம் ஆண்டில் ஆட்சிபீடமேறிய அரசாங்கம் உள்ளடங்கலாக பல்வேறு அரசாங்கங்களும் மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்குத் தவறியிருப்பதுடன் அதன் விளைவாக குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு அதிகரித்துள்ளது. அதேபோன்று இலங்கையில் பொலிஸாரினால் நிகழ்த்தப்படும் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் என்பன அதிகரித்துள்ளன. மக்கள் மத்தியில் தமக்குக் காணப்படும் ஆதரவை இழந்துவிடுவோம் என்ற அச்சமும், பெரும்பான்மையினரல்லாத சமூகங்களின் கோரிக்கைகள் வெகுவாகக் கருத்திலெடுக்கப்படுகின்றன என்ற நிலைப்பாடு ஏற்பட்டுவிடக்கூடும் என்ற எண்ணமுமே கடந்த அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தாமைக்கான காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

அதன் விளைவாக சிங்கள பௌத்த தேசியவாதத்தை அடிப்படையாகக்கொண்ட பெரும்பான்மைவாதப்போக்கு இலங்கையில் நிலைகொண்டிருப்பதை ஏற்றுக்கொள்வதற்கு அரசு மறுப்பதுடன் ஏனைய சமூகங்கள் மீதான அடக்குமுறைகள் மிகச்சாதாரணமானவையாகவும் மாற்றப்பட்டு விட்டன. குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு என்பது இலங்கையில் நிரந்தரமான தொன்றாகவே மாறிவிட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிக்காத, ஏதேச்சதிகாரப்போக்கிலான தற்போதைய அரசாங்கம், குறைந்தபட்சம் அனைத்துத்தரப்பினரையும் உள்வாங்கக்கூடிய வகையிலான பொதுக்கொள்கையை வகுப்பதற்கும் ஆட்சிநிர்வாகத்தை முன்னெடுப்பதற்குமான முயற்சிகளைக்கூட மேற்கொள்ளவில்லை. மாறாக அரசாங்கம் சிறிதாகவும் பெரிதாகவும் தமக்குக் கிடைக்கக்கூடிய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமது பெரும்பான்மைவாத இயல்பை மீண்டும் நிரூபிக்கும் விதமாகவே செயற்படுகின்றன.

ஜனாதிபதியின் கொள்கையில் சிங்கள பௌத்த தேசியவாதமும் இராணுவயமாக்கலும் இரு பிரதான கூறுகளாகக் காணப்படுவதுடன் அவை தீர்மானங்களை மேற்கொள்வதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. வெறுப்புணர்வை ஊக்குவிக்கும் வகையிலான சிங்கள பௌத்த தேசியவாதத்தை மையப்படுத்திய அரசியல் செயற்பாடுகள் ஏற்கனவே இன, மதரீதியாக பல்வேறு வழிகளிலும் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்களை இலக்குவைக்கின்றது.

இந்த சிங்கள பௌத்த தேசியவாதம் மற்றும் இராணுவமயமாக்கல் ஆகியவற்றின் ஓரங்கமாக, பௌத்த சின்னங்கள் காணப்பட்டதாகக்கூறி தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எது எவ்வாறெனினும் அரசாங்கத்தினால் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிகச்சொற்பளவான நடவடிக்கைகளும் ஏனைய தரப்புக்களின் அழுத்தத்தின் விளைவானவையேயாகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தக்கவைத்துக்கொள்ளல் ஆகியவற்றை அதற்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும்.

மேலும் நாட்டில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி சுருக்கமடைந்திருப்பதுடன் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பெருமளவிற்கு இராணுவமயமாக்கப்பட்டிருப்பதுடன் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இராணுவத்தினரின் தொடர்ச்சியான கண்காணிப்பிற்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

அடுத்ததாகப் 'போதைப்பொருளுக்கு எதிரான போரில்' பல்வேறு சட்டவிரோத படுகொலைகள் இடம்பெற்றிருப்பதுடன் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய பெரும் எண்ணிக்கையானோர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இலங்கையில் நடைமுறையிலுள்ள 'கட்டாய போதைப்பொருள் புனர்வாழ்வளித்தல்' முறைமையானது மனித உரிமைகள் நியமங்களை மீறுவதாக அமைந்துள்ளது. இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் போதைப்பொருள் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைகளுக்கு முகங்கொடுப்பதுடன் அவர்கள் முறையற்ற விதத்தில் நடாத்தப்படுகின்றார்கள்.

அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்தும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதற்கு மிகச்சிறந்த உதாரணமாக தீவிரவாத மற்றும் அடிப்படைவாத சிந்தனையுடையவர்கள், அத்தகைய செயற்பாடுகளுடன்தொடர்புபட்டவர்களுக்குப்புனர்வாழ்வளிப்பது குறித்து கடந்த மார்ச் மாதம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டல்களைக் குறிப்பிட முடியும்.

இவ்வாறானதொரு பின்னணியில் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஆதரவென்பது 'நிபந்தனைகளற்றதாக' இருக்கக்கூடாது. மாறாக அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்திற்கு அமைவானதாகவே காணப்பட வேண்டும். அதேபோன்று சர்வதேச நீதிப்பொறிமுறை, மக்னிற்ஸ்கி சட்டப்பயன்பாடு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 7031(சி) சரத்தின் கீழான தடை போன்ற பல்வேறு வழிமுறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதற்கு அவசியமான ஒத்துழைப்பை அமெரிக்கா வழங்க வேண்டும். மேலும் இனப்பிரச்சினைக்கான அடிப்படைக்காரணத்தைக் களையக்கூடியவாறான அரசியல் தீர்வை அடைந்துகொள்வதற்கும் ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# தொழிலாளர் தலைவர்கள் 10 பேருக்கு பிரதமர் தலைமையில் கௌரவிப்பு

(எம்.எம்.சில்வெஸ்டர்)

நீண்ட காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தொழிலாளர் தலைவர்கள் 10 பேரை கௌரவிக்கும் விழா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளைய தினம் (15) அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜாதிக்க சம்பத்த லொத்தரின் 'ஷ்ரம வாசனா' நிதி ஒதுக்கீடு மற்றும் தொழில் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வானது இரண்டாவது தடவையாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர்கள் சங்கத்தின் லெஸ்லி தேவேந்திர, அகில இலங்கை ஒன்றிணைந்த மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தயாரத்ன முனிதாச பெர்னாண்டோ, ஒன்றிணைந்த தோட்ட வர்த்தக சங்கத்தின் சுப்பையா சுப்பிரமணியம் ராமநாதன், அகில வர்த்தக மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்கள் சங்கத்தின் எச்.ஏ.முனிதாச, இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கத்தின் பத்மசிறி அமரசிங்க, விவசாய மற்றும் தோட்ட தொழிலாளர் சங்கத்தின் ரெங்கப்பா மருதமுத்து கிருஷ்ணசாமி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆர்.பழனிமுத்து, ஐக்கிய தோட்ட சேவையாளர்கள் சங்கத்தின் முத்துசாமி, இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் டீ.எம்.ரஹீம் ரஷீடீன், சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைகள் சங்கத்தின் என்டன் மார்க்கஸ் ஆகிய தொழிலாளர் தலைவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

முன்னாள் தொழில் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றியிருந்த மஹிந்த மடிஹேவா மற்றும் ஜீ.வீரக்கோன் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிக்கப்படும் தொழிலாளர் தலைவர் களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படுவதாக தெரிவித்த தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழில் அமைச்சர்களாக செயற்பட்டிருந்த அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர் காமினி லொக்குகே உள்ளிட்ட அமைச்சர் கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.


# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1967

மறைவு 10 . 12 . 2021



**திருமதி கிருஷ்ணகுமாரி கதிர்காமநாதன்**
(Administrative Officer Urban Council - வல்வெட்டித்துறை)

கணை வைரவர் கோவிலடி. புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணகுமாரி கதிர்காமநாதன் கடந்த (10.12.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு மற்றும் தவமணிதேவி தம்பதியரின் மூத்த புதல்வியும். காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் மருமகளும். கதிர்காமநாதனின் அன்பு மனைவியும். கீர்த்தனா (வயம்ப பல்கலைக்கழகம்). சயந்தன் (SLIIT, இரண்டாம் வருடம்). சயனி (A/L Maths 2022) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.

காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி மற்றும் ரஞ்சனா. ராகவாச்சாரி. கிருஷ்ணகுமார். இந்திரகுமார். ராஜகுமாரி. வசந்தகுமாரி. ராமதாஸ். கவிதா ஆகியோரின் சகோதாரியும். கமலநாதன். கணேசநாதன். இராமநாதன். சுகந்தி. லோகநாதன். குகன். அகலிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**கணை வைரவர் கோவிலடி,**
**புலோலி தெற்கு,**
**புலோலி.**

தகவல் :
குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: சயந்தன் (மகன்)
+947 0148 8376

(cr. 36703) (2.6)


# சிறுவிளம்பரங்கள்


## மைவெளிச்சம்

ஓம் சாயப்பா உங்கள் பிறந்த திகதி வருடம் மாதம் என்பனவற்றுடன் முன்கூடியே தொடர்பு கொண்டு வரவும். காதல் பிரச்சினை, தொழில் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பயணம் போன்ற பிரச்சினைகளுக்கு முன்கூடியே 077 7368640 தொடர்பு கொண்டு வரவும். www.eswari.com (காலை 10 மணி தொடக்கம் 6.00 மணிவரை) Dr.ஈஸ்வரி Hons JP , இல.21/1/1 ஜெம்பட்டாவீதி கொழும்பு 13.

## சிறுநீரகம் தேவை

அறுபது (60) வயது ஆணுக்கு O Positive சிறுநீரகம் (Kidney) அவசரமாகத் தேவைப்படுகின்றது. சன்மானம் வழங்கப்படும். தொடர்பு - 076 8469301

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் நாள் கிழமை வாடகைக்கு மாடி வீடுகள் உண்டு. சகல வசதிகளும் கொண்டது. பாதுகாப்பானது. 077 2105957, 0777 388860, 011 2055308

## விற்பனைக்கு

Nipun Furniture மாபெரும் Sale இப்பொழுது No.43, St.Lucia's Squars (Facing St.Lucia's Street), Kotahena, Colombo - 13 இல் உள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது. Teak Almaraha, Beds, Sofa TV / Tables, Display Cupboard, Dining Tables, Computer Tables, Display Cupboards, T.V Stands, Writing Tables Office Cupboards, Sammy Cupboards, Pantry Cupboards, Glass LCD TV Stands இன்னும் பல வீட்டுக்கு தேவையான தளபாடங்கள் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு - 076 8779512 / 077 0622604

## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

## மணமகன் தேவை

1994 யாழிந்து விஸ்வகுலம், ஹஸ்தம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு #6650, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 664 9401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., 91 - 4/2, Galle Road, Bambalapitya, Colombo - 04.

## தேவை

கொழும்பு வீடுகளில் தங்கியிருந்து சமையல் வீட்டு வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் 30,000/= - 35,000/= வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. 071 7539333 ஏஜன்சி

## தேவை

கட்டுபெத்த ஹிமாலயா சலூனிற்கு வேலையாட்கள் தேவை. 50% கமிஷன். உணவு, தங்குமிடம் உண்டு. 071 6192405, 076 0501482

## ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

## உங்களுக்கு அதிர்ஷ்டம்

கவலைப்படாதீர்கள்! உங்களின் வாழ்க்கையில் நீங்கள் என்றும் அதிர்ஷ்டமுடன் வாழலாம். உங்களுக்கு ஏற்படும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் நேரில் அல்லது தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம். தபால் சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். 62 வருட ஆராய்ச்சியும் அனுபவமும் உள்ள உலகப்புகழ் பெற்ற உயர்வான அதி உத்தம மாமனிதர், அதிநவீன நிபுணர். தேசபந்து, தேசகீர்த்தி மௌலானா, மன்பஹா, அல்ஹாஜ், கலாநிதி ரசூல் மன்சூர் ஜேபி, Dr.Razul Manzurr, J.P. Dehiwala. Mobile: 077 2037871, 077 0809623, 076 2289457, 070 1364101

## தேவை

பாணந்துறையில் அமைந்துள்ள முஸ்லிம் உணவகமொன்றிற்கு Main Chef, Second Chef, Rice Maker, Rotty Maker, Shorteats Maker, Bakery Bass, Bakery Cake Bass மற்றும் Parcel Counter Helper தேவை. Dilani Bake House - No.155, Horana Road, Panadura. தொடர்புகளுக்கு - 077 9195926 / 076 0729549

## தேவை

நிட்டம்புவயில் உள்ள சொசேஜஸ் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் தரப்படும். அடிப்படை சம்பளம் 40,000/=. மேலதிக தகவல்களுக்கு - 0777 355722, 071 1442816

## தேவை

முட்டை தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. உணவு, தங்குமிடம் தரப்படும். வயது 25 - 55. சம்பளம் 35,000/=. 0777 355722, 071 1442816

## வீடு விற்பனைக்கு

கொழும்பு 10, மாளிகாவத்தை தொடர்மாடியில் 2 அறைகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. 38 இலட்சம். வாங்குபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். 071 0380125

## தேவை

தேங்காய் பால்மா தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் தேவை. வயது 18 - 40 அடிப்படை சம்பளம். 40,000/= - 45,000/= வரை. மேலதிக தகவல்களுக்கு - 0777 355722, 071 1442816





# அணிக்குள் வருகிறார் மஹேல



இலங்கை கிரிக்கெட் அணி, 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி மற்றும் இலங்கை 'ஏ' அணி ஆகியவற்றின் பயிற்றுவிப்பு ஆலோசகராக மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு மஹேல இந்தப் பதவியில் இருப்பார் என்று இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தேசிய அணிகளின் ஒட்டு மொத்த கிரிக்கெட் அணிகளின் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பார் என்றும் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் உயர் செயல்திறன் மையத்தில் வீரர்கள் மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு மூலோபாய ஆதரவையும் மஹேல ஜயவர்தன வழங்குவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கிரிக்கெட் அணி இருபதுக்கு–20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்றிருந்த போது அணியின் ஆலோசகராக மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டிருந்தார்.

அப்போது இலங்கை அணி பங்கேற்ற தகுதிச் சுற்றுப் போட்டிகளில் மஹேல அணியோடு இணைந்திருந்தார்.

அந்த சில போட்டிகளில் மஹேலவின் ஆலோசனைகள் கைகொடுக்க இலங்கை அணி அபார வெற்றிகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விலகும் ஹசில்வுட்



ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஹசில்வுட் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸி. – இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த டெஸ்ட் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

## புதிய சம்பியன்

பார்முலா 1 கார் பந்தயத்தின் 2021 தொடரில், ரெட் புல் ரேசிங் அணி வீரரான நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் முதல் முறையாக உலக சம்பியன் பட்டம் வென்றார்.

நடப்பு தொடரில் கடைசி போட்டியாக நடைபெற்ற அபுதாபி கிராண்ட் பிரீ பந்தயத்தில் (58 சுற்று) அபாரமாக செயற்பட்ட வெர்ஸ்டாப்பன் (1 மணி, 30 நிமிடம் 17.345 விநாடி) முதலிடம் பிடித்து 26 புள்ளிகள் பெற்றார்.

2ஆவது இடத்தை மெர்சிடிஸ் அணி வீரர் லூயிஸ் ஹாமில்டன் பெற்றார்.

## ஒரே ஓவரில் 6 விக்கெட்



ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான ஹர்ஷித் சேத் ஒரு ஓவரில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அரிய சாதனை படைத்துள்ளார்.

டுபாயில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் அஜ்மான் கிரிக்கெட் கவுன்சில் நடத்திய 19 வயதிற்குட்டோருக்கான கர்வான் குளோபல் கிரிக்கெட் போட்டியில் ஒரு ஓவரில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி அரிய சாதனை படைத்துள்ளார்.

டுபாய் கிரிக்கெட் கவுன்சில் ஸ்டார்லெட்ஸ் அணிக்காக விளையாடி வரும் சேத், ஹைதராபாத் ஹோக்ஸ் அகாடமி அணிக்கு எதிராக ஒரு ஓவரில் 6 பந்துகளில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். போட்டியில் 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



## பளுதூக்கல் சம்பியன்ஷிப் தொடரில்
# இலங்கைக்கு 3 பதக்கங்கள்

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் கொமன்வெல்த் பளுதூக்குதல் சம்பியன்ஷிப் போட்டி, உலக பளுதூக்குதல் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை மேலும் 3 பதக்கங்களை வென்றுள்ளது.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய இந்திக திஸாநாயக்க, மனோஜ் விஜேசிங்க மற்றும் நதீஷானி ராஜபக்ச ஆகியோர் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

அதேநேரம் இந்தப் போட்டியில் இலங்கை வீராங்கனைகள் வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

73 கிலோவுக்கு குறைவான எடைப் பிரிவில் போட்டியிட்ட இந்திக திஸாநாயக்க 130 கிலோ ஸ்னட்ச் மற்றும் கிளீன் அன்ட் ஜெர்க்கில் 156 எடையோடு மொத்தம் 286 கிலோ எடையை தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இந்த பதக்கத்தின் மூலம் இந்திக திஸாநாயக்க பொதுநலவாய பளுதூக்குதல் சம்பியன்ஷிப் போட்டியில் பெற்ற தனிநபர் பதக்கங்களின் எண்ணிக்கையை ஐந்தாக அதிகரிக்க முடிந்தது.

அவர் 2009 (62 எடைப் பிரிவு), 2013 (62 எடைப் பிரிவு), 2015 (69 எடைப் பிரிவு) மற்றும் 2018 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.

இதேவேளை, மனோஜ் விஜேசிங்க சர்வதேச பளுதூக்கும் போட்டியில் தனது முதல் பதக்கமாக 67 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

61 கிலோ எடைப் பிரிவில் நடேஷானி ராஜபக்ச வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

முன்னதாக ஸ்ரீமாலி சமரகோன் தங்கப் பதக்கத்தையும், திலங்க பலங்க சிங்க வெண்கலப் பதக்கத்தையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்டத்திறனுக்கு வந்த மெத்தியூஸ்

லங்கா பிரிமியர் லீக் தொடரின் கொழும்பு அணியின் தலைவராக அஞ்சலோ மெத்தியூஸ் காயத்திலிருந்து மீண்டு போட்டியில் களமிறங்கியுள்ளார்.

நான்கு போட்டிகளில் ஆடாமல் இருந்து நேற்று முன்தினம் நடைபெற்ற காலி அணிக்கெதிரான போட்டியில் களமிறங்கிய மெத்தியூஸ் 57 பந்துகளில் 73 ஓட்டங்களை (3 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள்) பெற்று அணியின் வெற்றிக்கு உதவினார்.

அத்தோடு நடப்பு எல்.பி.எல். தொடரில் ஒரு துடுப்பாட்ட வீரர் பெற்ற அதிகபட்ச தனிநபர் ஓட்டமாகவும் இது அமைந்தது.

மழை காரணமாக இந்தப் போட்டி 18 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு ஆடப்பட்டது.

இதில்

## மழையின் குறுக்கீட்டோடு சுவாரஷ்யம் இல்லாமல் நகரும் எல்.பி.எல்.

முதலில் ஆடிய கொழும்பு அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் வெற்றி இலக்கைத் துரத்திய காலி அணி 16.5 ஓவர்களில் 121 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவிக் கொண்டது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக போட்டிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. இதனால் எல்.பி.எல். போட்டிகள் சுவாரஷ்யமற்று காணப்படுகின்றன. ஓவர்களும் குறைக்கப்படுவதால் ஆட்டத்தின் போக்கே மாறிப் போகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இன்றைய எல்.பி.எல். போட்டிகள்**

| | |
|---|---|
| கண்டி எதிர் கொழும்பு | மாலை 3.00 |
| காலி எதிர் தம்புள்ளை | இரவு 7.30 |




# அவுஸ்திரேலியா - தென்கொரியா 717மி. டொலர் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்து



அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிஸனும் தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னும் 717 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பாதுகாப்பு உடன்படிக்கையில் நேற்று திங்கட்கிழமை கைச்சாத்திட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் கான்பரா நகருக்கு நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு சென்றுள்ள நிலையிலேயே மூன் ஜே இன் மேற்படி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளார்.

கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்ததற்குப் பின்னர் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்த முதலாவது வெளிநாட்டுத் தலைவர் என்ற பெயரை அவர் பெறுகிறார்.

இந்நிலையில் தற்போது செய்துகொள்ளப்பட்ட புதிய உடன்படிக்கையின் பிரகாரம் தென் கொரிய பாதுகாப்புக் கம்பனியான ஹன்வா அவுஸ்திரேலிய இராணுவத்திற்கு ஆட்டிலெறி ஆயுதங்களை வழங்கவுள்ளது.

இது அவுஸ்திரேலியாவுக்கும் ஆசிய நாடொன்றுக்குமிடையில் இதுவரை செய்துகொள்ளப்பட்டதிலேயே மிகப் பெரிய உடன்படிக்கையாக உள்ளது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட விவகாரம் அவுஸ்திரேலியாவுக்கும் சீனாவுக்குமிடையில் ஏற்கனவே நிலவும் பதற்றநிலையை மேலும் அதிகரிப்பதாக உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# சுவீடன் கடற்கரைக்கு அப்பால் இரு சரக்குக் கப்பல்கள் மோதி விபத்து

## காணாமல்போனவர்களைத் தேடும் நடவடிக்கை மும்முரம்

சுவீடன் கடற்கரைக்கு அப்பால் பால்டிக் கடலில் இரு சரக்குக் கப்பல்கள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அதில் பயணித்தவர்களை தேடும் பாரிய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கப்பல்களில் பயணித்த குறைந்தது இருவர் கடலில் மூழ்கியுள்ளதாக நம்பப்படுவதாக சுவீடன் கடல் சார் நிர்வாக அமைப்பு தெரிவிக்கிறது. இந்த அனர்த்தத்தில் டென்மார்க்கில் பதிவுசெய்யப்பட்ட கரின் ஹோஜ் கப்பல் கவிழ்ந்துள்ளது. விபத்துக்குள்ளான மற்றைய கப்பல் பிரித்தானிய கொடி பறக்கவிடப்பட்ட ஸ்கொட் கரியர் எனத் தெரிவிக்கப்படுகிறது.




விபத்தையடுத்து அந்தக் குளிரான கடல் பிராந்தியத்திலிருந்து கூச்சல் சத்தங்கள் கேட்டதாக சுவீடன் கடல் சார் நிர்வாக அமைப்பு கூறுகிறது. இந்த அனர்த்தமானது தென் சுவீடன் கடற்கரை நகரான யஸ்டாட்டிற்கும் டென்மார்க் தீவான போர்ன்ஹோமிற்குமிடையில் பால்டிக் கடல் பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தேடுதல் நடவடிக்கையில் சுவீடன் மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்த உலங்குவானூர்திகளும் படகுகளும் ஈடுபட்டுள்ளன.

# தென் ஆபிரிக்க ஜனாதிபதிக்கு கொரோனா



தென் ஆபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோஸாவிற்கு கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதையடுத்து அவர் அதற்கான சிகிச்சை பெற்று வருவதாகவும் அவருக்கு குறைந்த நோயறிகுறிகளே காணப்படுவதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கான முழுமையான தடுப்பூசி மருந்து ஏற்றிய அவர் கேப் நகரில் முன்னாள் ஜனாதிபதி எப்.டபிள்யூ.டி.கிளார்க்கின் ஞாபகார்த்த வைபவத்தில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய வேளை சுகவீனமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது அவர் (69 வயது) கேப் நகரில் தென் ஆபிரிக்க இராணுவ சுகாதார சேவையினரின் கண்காணிப்பின் கீழ் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளார்.

அவரது அனைத்துப் பொறுப்புகளும் ஒரு வார காலப் பகுதிக்கு பிரதி ஜனாதிபதி டேவிட் மபுஸாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ரமபோஸா புதிதாக பரவும் கொவிட்-19 கொரோனா வைரஸான ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகியுள்ளாரா என்பது குறித்து ஜனாதிபதியின் அலுவலகம் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

தென் ஆபிரிக்காவில் கொவிட்-19 கொரோனா வைரஸால் 90 ஆயிரத்து 137 பேர் பலியானதுடன் 31 இலட்சத்து 67 ஆயிரத்து 497 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் இந்த வைரஸால் 53 இலட்சத்து 24 ஆயிரத்து 691 பேர் பலியானதுடன் 27 கோடியே 5 இலட்சத்து 33 ஆயிரத்து 63 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேசமயம் தொற்றுக்குள்ளானவர்களில் 24 கோடியே 33 இலட்சத்து 17 ஆயிரத்து 805 பேர் குணமடைந்துள்ளனர்.

**உலகச் செய்திகள்**

# ஹொங்கொங் ஊடகத்துறை ஜாம்பவானுக்கு 13 மாத சிறை



ஹொங்கொங் ஊடகத்துறை ஜாம்பவானான ஜிம்மி லாயிற்கு 13 மாத சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றமொன்று நேற்று திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

தினமன் சதுக்க படுகொலை ஞாபகார்த்த நிகழ்வில் பங்கேற்றமைக்காகவே அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு (74 வயது) எதிராக சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அவர் 1989 ஆம் ஆண்டு சீனாவால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறையைக் குறிக்கும் ஞாபகார்த்த நிகழ்வில் பங்கேற்ற பல்லாயிரக்கணக்கானோரில் ஒருவராவார்.

# லெபனானில் மரணச்சடங்கில் துப்பாக்கி சூடு; 3 ஹமாஸ் உறுப்பினர்கள் பலி



தென் லெபனானிலுள்ள அகதிகள் முகாமில் இயக்கமொன்றின் உறுப்பினர் ஒருவரின் மரணச்சடங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பலஸ்தீன ஹமாஸ் குழுவின் 3 உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளதாக அந்தக் குழு தெரிவிக்கிறது.

மேற்படி இயக்கத்திற்கு எதிர் இயக்கமான பட்டாஹ சேர்ந்த உறுப்பினர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி புர்ஸ் அல் ஷிமாலி முகாமில் குண்டு வெடிப்பொன்றில் உயிரிழந்த பலஸ்தீனர் ஒருவரது மரணச்சடங்கு ஊர்வலத்தை இலக்குவைத்து துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக ஹமாஸ் குழுவைச் சேர்ந்த அதிகாரியான ராபத் அல் முர்ரா தெரிவித்தார்.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Tuesday, December 14, 2021